744

The "VAKIL"—Tamil Law Monthly for the Public

"வக்கீல்"

இந்த இதழில்

ஜமீன் இனாம் ஒழிப்பு சட்டம்

பஞ்சாயத்து மசோதா

ஷாப் சட்டம்

விற்பனை வரி விமர்சனம்

கண்ட்ரோல்-லைசென்சு

விலை நிர்ணயம்

ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தப்பட்ட சர்க்கார் அறிக்கைகள்

விபரங்கள் உள்ளே பார்க்கவும்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

1-3

தமிழ் மாதப் பத்திரிகை

ஜூன் 1949

தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ 3

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :
தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை
கும்பகோணம்
(Estd. 1925)

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர
மாத சட்ட வெளியீடு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடருமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி B. A., B. L.,
,, V. S. விஜயருகவாச்சாரி, B. A., B. L.

"வக்கீல்"

(சந்தா விபரம்)

வருட சந்தா	... ... ரூ.	3—0—0
தனிப் பிரதி	... ...	0—4—0
வெளி நாடு வருட சந்தா	...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

744
7-49

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 1 ஜூன் '49 இதழ் 3

பொருள் அடக்கம்

குறிப்புக்கள்	3
ஷாப் சட்டம் (தொடர்ச்சி)	5
ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டம்	9
விற்பனை வரி (தொடர்ச்சி)	15
கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள்	19
கிராமப் பஞ்சாயத்து மசோதா	26
(கேள்வியும்-பதிலும்)	28

N. கோபால்தாஸ் & கோ.,

வைரம், தங்க நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள்

சின்னகடைத்தெரு,
திருச்சி.



நெ. 121, பெரியதெரு,
கும்பகோணம்.

நல்ல சாமான்கள்! **நியாயமான விலை!!**

- வைரங்களில் பழைய வெட்டுமுதல் புது வெட்டுவரையில் எல்லா ரகங்களும் ஒவ்வொருவருடைய விருப்பத்திற்கேற்றவாறு கிடைக்கும்.
- ஒவ்வொரு வைர நகை வேலைப்பாடுகளும் கிராக்கிகளுக்கு பூரண திருப்தி அளிக்குமாறு எங்கள் நேர்பார்வையிலேயே தயாரிக்கப்படுகின்றன. இத்துடன்கூட கிராக்கிகளின் ஆர்டரின்பேரில் தங்க நகைகளும் செய்துகொடுக்கிறோம்.
- சீமைக்கட்டி வெள்ளியில் செய்யப்பட்ட வெள்ளிப் பாத்திரங்கள் எல்லா மாதிரிகளிலும் எப்போதும் தயாராக இருக்கின்றன. கிராக்கிகளின் ஆர்டர்பேரிலும் வெள்ளிப் பாத்திரங்கள் செய்துகொடுக்கிறோம்.

தங்கள் மேலான ஆதரவை எப்போதும் கோருகிறோம்.

187686

கல்யாண பட்டு நூல் ஜவுளிகளுக்கு

ராதா ஸில்க் எம்போரியம்

119, பெரியதெரு :: கும்பகோணம்.

போன் நெ. 83

Tel. "ROYAL"

உயர்ந்த பிளேசர் பட்டு உத்திரவாதமுள்ள ஜரிகை, பலரக கலர்கள்-உடை நயம் நாகரீக பலபார்டர் தினுசுகள் 6, 7, 8, 9, கெஜங்களில் ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ஒரே விலை விற்பனை

K. T. A. K. L.

பாலகிருஷ்ணையர்

பட்டு ஜவுளி வியாபாரம்

8, சௌராஷ்டிர பெரியதெரு,

கும்பகோணம்.

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 1 ஜூன் 1949 இதழ் 3

குறிப்புக்கள்

காமன் வெல்த் பிரகடனம்

“காமன் வெல்த்” என்ற ஆங்கில வார்த்தையை சமீபத்தில் பல முறை தமிழ்ப் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். ஏற்கனவே “பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்” என்று அழைக்கப்பட்ட பல வகைப்பட்ட நாடுகள் சிலகாலம் “பிரிட்டிஷ் காமன் வெல்த்” ஆக மாறி இப்பொழுது வெறும் “காமன் வெல்த்” ஆக பெயர் கொண்டிருக்கிறது. “பிரிட்டிஷ்” என்ற வார்த்தையைக்கூட எடுத்து விட சம்மதித்து விட்டார்கள். இதற்குக் காரணம் இந்தியாவே. இன்னும் சில நாட்களில் குடியரசாக மாறப் போகும் நமது தேசத்திற்கும் இங்கிலாந்து முதலிய பிரிட்டிஷ் நாடுகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்காது. பிரிட்டிஷ் மன்னருக்கும் இந்தியாவில் எவ்வித சட்ட பூர்வமான அந்தஸ்தும் இருக்காது. பிரிட்டிஷார் குடியேறிய நாடுகளாகிய கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலண்டு, தென் ஆப்பிரிக்கா, போன்ற மற்ற காமன்வெல்த் நாடுகள் பிரிட்டனைப் போலவே சுயேச்சை நாடுகளாக இருந்தாலும் அவை எல்லாம் பிரிட்டிஷ் மன்னரையே தங்களுக்கும் மன்னராக ஒப்புக் கொள்கின்றன. சுதந்திர இந்தியா இதை ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் இந்த எல்லா நாடுகளும் ஒரு சங்கம் போல் இருக்கவும் அச்சங்கத்திற்கு அக்கிராசனர் போல் பிரிட்டிஷ் மன்னரை ஒப்புக் கொள்வதாகவும் இந்தியா (பிரதமர் நேருஜீ மூலம்) லண்டனில் சம்மதித்திருக்கிறது. இந்த சங்கத்திற்குத்தான் “காமன் வெல்த்” என்று பெயர். பிரிட்டனுடன் நம்மை இணைத்த இரும்புச் சங்கிலி சிலகாலம் கயிராக மாறி இப்பொழுது காற்றின் வேகத்தால் அறுந்து போகக்கூடிய மெல்லிய பருத்தி நூலாக மாறி இருக்கிறது. காற்றடிக்காமல் பார்த்துக் கொள்வோமாக!

கிராமப் பஞ்சாயத்து மசோதா

இந்தியாவின் ஜீவநாடி கிராமப்பிரதேசங்களில்தான் இருக்கிறது. கிராம வாழ்க்கையை எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் சென்னை சர்க்கார் ஒரு பஞ்சாயத்துச் சட்டம் இயற்ற தீர்மானித்திருக்கின்றனர். அதற்காக சர்க்கார் தயாரிக்கப்போகும் மசோதாவின் முக்கிய அம்சங்களை நேயர்கள் இப்பத்திரிகையில் “உலையில்” என்ற பகுதியில் காணலாம். இது சட்டமானால் கிராமப் பஞ்சாயத்துக்கள் உயிருள்ளனவாக ஆகும். ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திற்கும் சிவில் கிரிமினல் நீதி வழங்கவும், சிற்சில பத்திரங்களை சப்ரிஜிஸ்ட்ராரைப்போல் ரிஜிஸ்டர் செய்யவும், கோவில் முதலிய தர்ம சொத்துக்களைத் தர்மகர்த்தாக்களாக.பரிபாலனம் செய்யவும், குடி மராமத்து செய்யவும் அதி

காரமும் இன்னும் பல அதிகாரங்களும் கொடுப்பதாக இந்த மசோதாவில் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இம்மசோதாவைப் பற்றிய பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை சர்க்கார் அறிய விரும்புகின்றனர். நேயர்கள் இந்த மசோதாவை சரிவர படித்து அவர்களுடைய அபிப்பிராயங்களை சர்க்காருக்குத் தெரிவிக்கலாம். இது விஷயமாய் நேயர்கள் சுருக்கமாய் 'வக்கீல்' பத்திரிகைக்கு எழுதி அனுப்பப்படும் அபிப்பிராயங்களையும் அடுத்த இதழில் பிரசுரிப்போம்.

மத்ய சர்க்கார் காரியாலயமும் வக்கீல்களும்: டில்லியிலுள்ள மத்திய சர்க்கார் சட்ட இலாகா மாகாண சர்க்கார்களுக்குக் கீழ்க்கண்டபடி ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. "வியாபாரிகள் சார்பாகவும் பொது ஜனங்கள் சார்பாகவும் ஊதியம் பெற்று வக்கீல்கள் மத்ய சர்க்கார் காரியாலய அதிகாரிகள் முன்பு ஆஜராகி குறைகளையும் புகார்களையும் தெரிவிக்கின்றனர். நீதி நிர்வாகம் சம்பந்தமான அதிகாரமில்லா அதிகாரிகள் முன்பு வக்கீல் ஆஜராவது பொருத்தமாயிருக்குமா என்ற பிரச்னை கிளப்பப்பட்டிருக்கிறது. மந்திரி முன்போ சர்க்கார் காரியாலய அதிகாரி முன்போ ஊதியம் பெற்று ஆஜராக வக்கீல்களுக்கு அதிகாரம் கிடையாதென்றே வக்கீல்கள்—நடை முறை சட்டத்திலிருந்து தெரிய வருகிறது. வக்கீல்களின் நடைமுறைச் சட்டம் பிரகாரம் அதை தடை செய்வது சாத்யமில்லையென்றால் அதை வக்கீல் சங்கங்களாவது (பார் கவுன்சில்) தடை செய்ய வேண்டும்.

இவ்விஷயம் சம்பந்தமாக வக்கீல் சங்கத்தையும் ஹைக்கோர்ட்டையும் கலந்து பேசும்படி மாகாண சர்க்கார்களுக்கு யோசனை கூறுகிறோம்."

இவ்விதம் மத்திய சர்க்கார் காரியாலயம் ஒரு சுற்றறிக்கை அனுப்ப என்ன சந்தர்ப்பம் ஏற்பட்டதென்று தெரியவில்லை. பொது விஷயங்களைப்பற்றி பொது ஜனங்களின் அல்லது ஒரு வகுப்பினரின் அபிப்பிராயங்களை மந்திரிமார்கள் கேட்க விரும்பி அதற்குச் சந்தர்ப்பம் அளித்தால் அவ்விஷயங்களை ஒரு வக்கீல் மூலம் தெரியப்படுத்துவதில் என்ன தவறு இருக்கிறது? அபிப்பிராயங்களைத் தெரிவிக்க விரும்புவோர் ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்வதில் தேர்ச்சியற்றவராக இருக்கலாம். அவர் ஒரு வக்கீல் மூலம் தன் அபிப்பிராயங்களைச் சொல்லக் கூடாதென்று தடுக்கப்பட்டால் அவர் அபிப்பிராயமே சொல்லக் கூடாதென்று தடுப்பதுபோல்தான் ஆகும். மேலும் "சட்டம்" என்பது பொது ஜனங்களை எப்படிக் கட்டுப்படுத்துமோ அப்படியே சர்க்காரையும், மந்திரிகளையும், அதிகாரிகளையும் கட்டுப்படுத்தும். அச்சட்டத்தை மந்திரிகளிடமோ, அதிகாரிகளிடமோ அவசியமான சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டுவது சரியானால் ஏன் வக்கீல்கள் அதை எடுத்துச் சொல்லக்கூடாது?

காபிஸ்டாம்புகள்-கட்டண உயர்வு ஏற்படலாம்

இப்பொழுது கோர்ட்டுகளில் நகல் வாங்க 175 வார்த்தைகளுக்கு அணா 3 ஆக இருப்பதை அணா 5 ஆக உயர்த்தப்போவதாகவும் ஆக்ஷேபணை உள்ளவர்கள் 15-6-1949-க்குள் ஹைகோர்ட்டுக்குத் தெரிவித்துக் கொள்ளலாமென்றும் 24—5—1949 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் 3-ம் பக்கத்தில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஷாப் சட்டம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஷாப் சட்டத்தின் எல்லா முக்கிய அம்சங்களையும் கடைகள், ஹோட்டல்கள் உள்பட எல்லாவிதமான ஸ்தாபனங்களின் முதலாளிகளும், சிப்பந்திகளும் சரிவர தெரிந்து கொள்ளும்பொருட்டு, இவ்விஷயத்தை கேள்வி-பதில் என்ற நடையில் எழுதியிருக்கின்றோம். சென்ற இதழில் ஷாப் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் யார்; கடைகள், ஸ்தாபனங்கள் திறந்து மூடும் நேரம்; வார விடுமுறை: சிப்பந்திகளின் வயது; சிப்பந்திகளின் தினசரி வேலை நேரம் இவ்விஷயங்களைப்பற்றி சொல்லப்பட்டன.

சிப்பந்தியின் வருடாந்திர விடுமுறை நாட்கள். (லீவு நாட்கள்)

கேள்வி: கடை, ஹோட்டல் முதலிய எவ்விதமான ஸ்தாபனங்களிலும் வேலை செய்யும் சிப்பந்திக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை கொடுத்தேதீரவேண்டுமென்றும், தினசரி சிப்பந்தியின் வேலை நேரமும், ஷாப் சட்டத்திற்கு ஒத்தபடி ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டதே. இதைத் தவிர சிப்பந்திக்கு வேறு கட்டாயமான சலுகைகள் சட்டத்தில் உண்டா? இவ்விதம் வருடம் பூராவும் ஒரு சிப்பந்தி வேலைசெய்ய கடமைப்பட்டவரா?

பதில்: இல்லை. வாரத்தில் ஒரு நாள் விடுமுறையைத் தவிர, ஒரு வருடம் தொடர்ச்சியாய் வேலையிலிருந்த ஒரு சிப்பந்திக்கு அடுத்த வருடத்தில் 12 தினங்கள் விடுமுறை கொடுக்கவேண்டும். தவிர தேக அசௌக்கியம் அல்லது தற்செயலாய் நேர்ந்த விபத்து காரணமாக ஒரு வருடத்தில் ஒரு சிப்பந்தி 12 நாட்கள வரை லீவு எடுத்துக்கொள்ளலாம். மேலும் மற்ற தகுந்த காரணங்களுக்காக ஒரு வருடத்தில் இன்னும் 12 நாட்கள் வரை "காஷ்வல்" லீவு எடுத்துக்கொள்ள ஒரு சிப்பந்திக்கு பாத்தியமுண்டு. [25]

கேள்வி: சட்டம் இவ்விதம் தனக்கு சலுகைகள் காண்பிக்கின்றதென்று ஒருசிப்பந்தி லீவு எடுத்துக்கொண்டுபோனல் அச்சிப்பந்திக்குத் தானே நஷ்டம்? அந்த லீவு நாட்களின் சம்பளத்தை அவர் இழந்து விடுவாரல்லவா?

பதில்: இழக்கமாட்டார். இவ்விதம் லீவு எடுத்தாலும் அந்த லீவு நாட்களுக்கும் சிப்பந்திக்குச் சம்பளம் உண்டு. இவ்விதம் "சம்பளத்துடன் ஒய்வு நாட்கள் அல்லது விடுமுறை நாட்கள்" அடைய ஷாப் சட்டப்படி சிப்பந்திக்கு பாத்தியம் உண்டு. இந்த விடுமுறை நாட்களுக்கு சம்பளம் கொடுக்காவிட்டால் அது குற்றமாகும். [26-45]

கேள்வி: ஒரு வருடம் தொடர்ச்சியாய் வேலையிலிருந்துவரும் சிப்பந்திக்கு அடுத்த வருடத்தில் 12 நாட்கள் கொடுக்கவேண்டிய விடுமுறை நாட்களை அச்சிப்பந்தி இஷ்டம் போல் சேர்த்து வைத்து சேர்ந்தார்ப்போல் லீவு எடுத்துக்கொள்ளலாமா?

பதில்: 24 நாட்கள் வரை சேர்த்து வைத்து சிப்பந்தி லீவு எடுத்துக்கொள்ளலாம். அதாவது இரண்டு வருடம் இவ்வித லீவே எடுக்காமல் இருக்கும் ஒரு சிப்பந்தி மூன்றாவது வருடத்தில் 24 நாட்கள் லீவு எடுத்துக்கொள்ளலாம். ஆனல் 3 வருடம் லீவே எடுத்துக்கொள்ளாமல் 4-வது வருடத்தில் 36 நாள் விடுமுறை கேட்க முடியாது. சட்டப்படி இந்த விடுமுறையை 24 நாட்கள்தான் சேர்த்து வைக்க சிப்பந்திக்கு உரிமை. [25]

கேள்வி: இந்த 12 நாள் லீவை சிப்பந்தி இஷ்டப்பட்ட நாட்களில் எடுத்துக்

இதுபோல் [ ] பிராக்கெட்டுக்குள் இருக்கும் எண் சட்டத்தின் செக்ஷனைக் குறிக்கும்

கொள்ளலாமா? அல்லது ஒரு ஸ்தாபனக்காரர் ஒவ்வொரு வருடமும் தனக்கு இஷ்டப்பட்ட 12 தினங்களில் ஸ்தாபனத்தையே மூடி இந்த 12 நாட்கள்தான் சிப்பந்திகளின் வருட விடுமுறை நாட்கள் என்று சொல்லலாமா?

பதில்: ஷாப் சட்டம் இவ்விஷயத்தில் இன்னும் கொஞ்சம் தெளிவாய் இருந்தால் நல்லது. இந்த விடுமுறை நாட்கள் சிப்பந்தியின் இஷ்டப்படி எடுத்துக்கொள்ளலாமென்றே தோன்றுகிறது. ஏனென்றால், இரண்டு வருடம் இவ்வித விடுமுறையை அடையாமல் 24 நாட்கள் வரை விடுமுறை நாட்களை சேர்த்துக்கொள்ள சிப்பந்திக்குத்தான் பாத்தியமிருக்கிறது. முதலாளி ஒரு வருடத்தில் தனக்கு இஷ்டப்பட்ட 12 நாட்கள் ஒரு ஸ்தாபனத்தை மூடிவிட்டு, சிப்பந்திக்கும் இதுதான் விடுமுறை நாட்கள் என்று சொன்னால் அது சிப்பந்தியின் பாத்தியத்திற்கு விரோதமாக இருக்கிறது. அப்படி கட்டாய விடுமுறை விட முதலாளிக்கு சட்டப்படி பாத்தியமில்லை என்றுதான் தோன்றுகிறது.

கேள்வி: ஒரு வருடத்தில் யாதொரு தேக அசௌகரியமும் ஏற்படாத ஒரு சிப்பந்தி அதற்காக அவர் எடுத்துக்கொள்ளக்கூடிய 12 நாள் லீவை எடுத்துக்கொள்ளலாமா?

பதில்: தேக அசௌகரியம் அல்லது எதிர்பாராத விபத்து நேரும் காலத்தில்தான் சிப்பந்தி வருடத்தில் 12 நாட்கள் சம்பளத்துடன் விடுமுறை கேட்கலாம். 12 நாட்களுக்கு மேல் தேக அசௌக்கியத்தினால் லீவு எடுத்துக்கொள்ளும்படி நேரிட்டால் அதற்கு சம்பளம் கிடையாது.

உதாரணம்: ஒரு வருடம் வேலையிலிருந்த ஒரு சிப்பந்திக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டு 30 தினங்கள் வேலைக்குப் போக முடியவில்லை. இதில் 12 தினங்கள் சட்டப்படி சம்பளத்துடன் தேக அசௌக்கியம் காரணமாக அவருக்கு லீவு கொடுக்க வேண்டும். பாக்கி 18 நாட்களுக்கு அவருக்கு சம்பளம் கிடையாது. ஆனால் அவருக்கு யாதொரு காரணமுமில்லாமல் சம்பளத்துடன் 12 நாட்கள் எடுக்கக்கூடிய விடுமுறையைக் கொடுக்கும்படி கேட்கவும், தகுந்த காரணங்களுக்காக சம்பளத்துடன் அவருக்குள்ள 12 நாட்கள் விடுமுறையையும் அவர் உபயோகப்படுத்திக்கொள்ளவும் சட்டத்தில் இடமுண்டு. அப்படிச் செய்தால் வேலைக்கு வராத 30 தினங்களுக்கும் சிப்பந்திக்கு சம்பளம் உண்டு.

கேள்வி: ஒரு வருடம் தொடர்ந்து வேலையிலிருந்த ஒரு சிப்பந்தி தனக்குள்ள 12 நாள் விடுமுறை நாட்களை உபயோகப்படுத்துமுன் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார். முதலாளிக்கு இந்த 12 நாள் சம்பளம் மிச்சமாகுமா?

பதில்: இல்லை. வேலையிலிருந்து நீக்கப்பட்டாலும் சிப்பந்தி எடுத்துக்கொள்ளக்கூடிய விடுமுறை நாட்களுக்குள்ள சம்பளத்தை அவருக்குக் கொடுக்கவேண்டும். கொடுக்காவிட்டால் அது குற்றம். [25 (3)-45]

கேள்வி: ஒரு வருடம் தொடர்ந்து வேலையிலிருந்த சிப்பந்தி தனக்குள்ள 12 நாள் விடுமுறையை கேட்கிறார். முதலாளி விடுமுறை கொடுக்க மறுக்கிறார். சிப்பந்தி அக்காரணத்தினால் தானாகவே வேலையிலிருந்து நீங்கிக்கொண்டால் அவருக்கு நஷ்டம்தானே?

பதில்: இல்லை. இச்சந்தர்ப்பத்திலும் முதலாளி அவருக்குள்ள விடுமுறை நாள் சம்பளத்தைக் கொடுக்கவேண்டும். [24 (3)-45]

கேள்வி: சிப்பந்தி தேக அசௌக்யத்தினால் அல்லது விபத்தினால் வேலைக்குவர முடியாமலிருக்கும் காலத்தில் அவரை முதலாளி வேலையை விட்டு நீக்கினால் என்ன?

பதில்: இச்சந்தர்ப்பத்தில் சிப்பந்திக்கு சீக்கு லீவுக்குள்ள சம்பளத்தையும், காரணமில்லாமல் அவர் எடுத்துக்கொள்ளக்கூடிய விடுமுறை நாள் சம்பளத்தையும் சேர்த்துக்

கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுக்கா விட்டால் குற்றமாகும். [25 (4)-45]

கேள்வி: ஒரு வருடம் தொடர்ச்சியாய் வேலையில் இருக்கும் சிப்பந்திக்குத்தான் மேற்கண்ட விடுமுறைகள் உண்டென்றால் அந்த ஒரு வருடத்தை எப்படிக் கணக்குச் செய்வது?

பதில்: தொடர்ச்சியாய் ஒரு வருடம் என்பதை கணக்குச் செய்வதில் (1) சிப்பந்தி சட்டப்படி எடுத்துக்கொள்ளக்கூடிய விடுமுறை நாட்களையும், (2) முதலாளியே ஸ்தாபனத்தை மூடிவைத்திருக்கும் (லாக் அவுட்) தினங்களையும், (3) சட்டபூர்வமாய் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் (ஸ்ட்ரைக்) செய்த தினங்களையும், (4) 30 தினங்களுக்கு மேற்படாத தெய்வாதீனமாய் ஏற்படக்கூடிய வேலையில்லா தினங்களையும் சேர்த்துக்கொண்டேதான் கணக்கு செய்ய வேண்டும். [25 (5)]

கேள்வி: இவ்விதம் சிப்பந்திக்குள்ள விடுமுறை நாள் சம்பளத்தை எப்படிக் கணக்குச் செய்வது?

பதில்: விடுமுறைக்கு முன் உள்ள 3 மாதங்களில் சிப்பந்திக்கு (ஓவர்டயம் என்ற அதிக நேர வேலைச் சம்பளம் நீக்கி) எவ்வளவு நாள் வேலைக்கு எவ்வளவு சம்பளம் கிடைத்திருக்கிறதென்று கணக்குப் பார்த்து அதிலிருந்து தினசரி சராசரி சம்பளம் எவ்வளவோ அதன்படியே விடுமுறை நாட்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டும். [26]

கேள்வி: இந்த விடுமுறை நாட்களை அதிகப்படுத்தலாமா?

பதில்: இப்பொழுது சட்டத்தில் கண்ட விடுமுறை நாட்களை ஜாஸ்தி செய்ய மாகாண சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. [27]

கேள்வி: இவ்விதம் விடுமுறை நாட்களுக்குள்ள சம்பளத்தை ஒரு முதலாளி கொடுக்க மறுத்தால் சிப்பந்தி என்ன செய்வது?

பதில்: அப்படி மறுப்பது குற்றமாகையால் முதலாளியின் பேரில் பிராசிகூஷன் ஏற்படலாம். சிப்பந்தி சிவில் கோர்ட்டில் நேரடியாக தாவா தொடரலாம். தவிர அச்சிப்பந்தியின் சார்பாக ஷாப் இன்ஸ்பெக்டரே நேரடியாக முதலாளியின்பேரில் தாவா தொடர்ந்து தொகை வசூல்செய்து சிப்பந்தியிடம் கொடுக்கலாம். [28]

கேள்வி: ஒரு சிப்பந்திக்கு ஷாப் சட்டப்படி ஒரு வருடத்தில் சம்பளத்துடன் எவ்வளவு விடுமுறை நாட்கள் ஆகின்றன?

பதில்: எல்லாவற்றையும் கூட்டிப் பார்க்க வேண்டும். வாரம் ஒரு நாள் விடுமுறை. இது வருடத்தில் 52 தினங்கள். தவிர காரணங் காட்டாமல் ஒரு வருடத்தில் 12 நாள்; சிக் லீவு (தேக அசௌக்யம் அல்லது விபத்துக்காக) 12 நாள்; காஷ்வல் லீவு என்ற தகுந்த காரணங் காட்டி எடுக்கக்கூடிய லீவு 12 நாள். ஆக ஒரு வருடத்தில் இப்பொழுது உள்ள சட்டப்படி ஒரு சிப்பந்திக்கு சம்பளத்துடன் 88 நாட்கள் விடுமுறையாகிறது. மாகாண சர்க்கார் இனி இவைகளை அதிகப்படுத்த அதிகாரமுண்டு. வாரத்தில் ஒண்றை நாட்களாக்கலாம். மற்ற விடுமுறை நாட்களையும் அதிகப்படுத்தலாம்.

சிப்பந்தியின் சம்பளம்

கேள்வி: சிப்பந்திக்கு சம்பளம் கொடுக்க யார் ஜவாப்தாரி?

பதில்: சிப்பந்தியை வேலையில் அமர்த்திக்கொண்டிருப்பவர் அல்லது "முதலாளி" தான் ஜவாப்தாரி. "முதலாளி" (எம்ப்ளாயர்) என்றால் ஒரு ஸ்தாபனத்தின் சொந்தக்காரர், அல்லது அதை பொறுப்புடன் நடத்துபவர், மானேஜர், ஏஜண்டு இவர்களும் சேர்ந்தவர்களாகையால் இவர்களுக்கும் சம்பளப் பட்டுவாடா செய்ய பொறுப்பும் கடமையும் உண்டு. [2 (5)-29]

கேள்வி: சிப்பந்தியின் சம்பளத்தை ஒரு வருடத்திற்கு ஒரு முறை கணக்குப் பார்த்து பட்டுவாடா செய்யலாமா?

பதில்: கூடாது. ஒவ்வொரு முதலாளியும் ஒரு சிப்பந்தியின் சம்பளம் எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை கொடுக்கப்படுமென்று முன்கூட்டியே தீர்மானிக்கவேண்டும். அது தினச்சம்பளமாக இருக்கலாம்; வாரச் சம்பளமாக இருக்கலாம்; மாதச் சம்பளமாகவும் இருக்கலாம். ஆனால் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலமாக இருக்கக்கூடாது. உதாரணமாக, இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சம்பளம் கொடுக்கப்படுமென்று ஏற்படுத்தக்கூடாது. [30]

கேள்வி: முதலாளி இஷ்டப்பட்ட காலத்தில் சிப்பந்திக்கு சம்பளம் கொடுக்கலாமா?

பதில்: கூடாது. எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை சம்பளம் கொடுக்கவேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அது முடிந்து 5 தினங்களுக்குள் சிப்பந்திக்கு சம்பள பட்டுவாடா செய்யவேண்டும். அதாவது தினச் சம்பளமாக இருந்தால் இன்று செய்த வேலைக்கு நாளை முதல் 5-தினங்களுக்குள்ளும், வாரச் சம்பளமாக இருந்தால் அடுத்தவாரம் 5 தினங்களுக்குள்ளும், அதேபோல் மாதச் சம்பளமாக இருந்தால் அடுத்த மாதம் 5 தினங்களுக்குள்ளும் பட்டுவாடா செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் குற்றமாகும். [32 (1)-45]

கேள்வி: மாதச் சம்பளம் வாங்கும் ஒரு சிப்பந்தியை முதலாளி மாத ஆரம்பத்திலேயே (உதாரணமாக 8-ம் தேதி) வேலையிலிருந்து நீக்கினால் அச்சிப்பந்திக்கு அடுத்த மாதம் 5 தினங்களுக்குள் அவருடைய சம்பள பாக்கியை கொடுத்தால் போதுமா?

பதில்: இதற்கு தனி விதி இருக்கிறது. அப்படி வேலையிலிருந்து நீக்கப்பட்ட சிப்பந்தியின் சம்பளம் நீக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு நாட்களுக்குள் கொடுக்கப்பட வேண்டும். நடுவில் விடுமுறை நாட்கள் வந்தால், வேலை நடக்கும் இரண்டாவது தினத்திற்குள் கொடுபடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் குற்றமாகும். [32 (2)-45]

கேள்வி: மாதச் சம்பளம் வாங்கும் ஒரு சிப்பந்தி மாத மத்தியில் தானாக விலகிக் கொண்டால் கூட அப்படித்தானா?

பதில்: அவருக்கு மாதம் முடிந்து 5 தினங்களுக்குள் சம்பளம் கொடுத்தால் போதும்.

கேள்வி: இவ்விதம் சம்பளப் பட்டுவாடா செய்யவேண்டிய தினங்களைப்பற்றிய விதிகள் சில ஸ்தாபனங்களுக்கும் சில முதலாளிகளுக்கும் மிக கஷ்டமாக இருக்குமல்லவா?

பதில்: அப்படி ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் சம்பள பட்டுவாடா விஷயத்தில் யுக்தமான விதிவிலக்குகள் செய்ய மாகாண சர்க்காருக்கு அதிகாரமுண்டு. [32 (3)]

கேள்வி: விடுமுறை நாட்களில் சம்பள பட்டுவாடா செய்யலாமா?

பதில்: கூடாது. வேலை நாட்களில் தான் செய்ய வேண்டும். [32 (4)]

கேள்வி: சிப்பந்திகளுக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்தை பாங்கு செக் அல்லது உண்டியல் மூலம் கொடுக்கலாமா?

பதில்: கூடாது. எவ்விதமான சம்பளமும் சர்க்கார் நாணயங்களாகவோ அல்லது கரன்சி நோட்டுகளாகவோ அல்லது இரண்டுமாகவோதான் கொடுக்க வேண்டும். இதற்குமாறாகச் சம்பளம் கொடுத்தாலும் குற்றம்தான். [33-45]

(தொடரும்)

பலவித புதுரக ஜவுளிகள் கிடைக்குமிடம்:
ஸ்ரீ வாசவி ஸ்டோர்ஸ், பெரிய கடைத்தெரு, கும்பகோணம்

ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டம்

சென்னை 1948-ம் வருடத்திய 26-வது ஆக்ட். இது 2—4—1949-ல் மேன்மை தங்கிய கவர்னர்ஜெனரல் அவர்களின் அங்கீகாரம் பெற்று 19—4—1949-ல் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

சட்டத்தின் நோக்கம்: சென்னை மாகாணத்தில் உள்ள கிராமங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். (1) திறப்பு அல்லது ரயத்துவாரி கிராமங்கள் (2) ஜமீன் கிராமங்கள் (3) இனாம் கிராமங்கள்.

திறப்பு: அல்லது ரயத்துவாரி கிராமங்களில் உள்ள நிலச்சுவான்தார்கள் அல்லது சொந்தக்காரர்களிடமிருந்து சர்க்காரே நேரடியாக நிலவரி வசூல் செய்கிறார்கள். ஒவ்வொரு நிலச்சுவான்தாருக்கும் சர்க்காரால் பட்டா கொடுக்கப்படுகிறது. திறப்புக் கிராமங்களிலுள்ள ஒவ்வொரு நிலமும் சர்வே செய்யப்பட்டு ஒவ்வொரு நிலத்திற்கும் நிலவரி நிர்ணயிக்கப்படுகிறது. பட்டாதாருக்கும் சர்க்காருக்கும் நடுவில் ஒருவருமில்லை.

ஜமீன்: கிராமங்களில் உள்ள நிலங்களின் சொந்தககாரர்கள் அல்லது நிலச்சுவான்தார்கள் சர்க்காருக்கு நேரடியாக யாதொரு நிலவரியும் கொடுக்க வேண்டியதில்லை. ஜமீன்தாருக்கு மேல்வாரம் கொடுக்கிறார். இந்த மேல்வாரம் ரொக்கமாகவோ தானியமாகவோ நிலத்தின் மகசூலில் ஒரு பாகமாகவோ இருக்கலாம். குடிக்காணி உள்ளவர்களிடம் மேல்வாரத்தை வசூல் செய்யும் ஜமீன்தார்தான் சர்க்காருடன் ஒப்பந்தம் செய்துகொண்ட பேஷ்குஷ் முதலிய தீர்வைகளைக் கொடுக்கிறார். ஜமீன்தாரே நிலச் சுவான்தார்களுக்கு பட்டா கொடுக்கிறார். ஜமீன் கிராமங்களில் குடிக்காணி பாத்திய முள்ளவர்களுக்கு 'ரயத்து' என்று பெயர்.

இனாம்: ஏற்கனவே இந்நாட்டில் ஆட்சி புரிந்த நம் தேசத்து மன்னர்கள் அடிக்கடி 'இனாம்' கொடுத்து வந்தார்கள். ஜமீன்தார்களும் 'இனாம்' கொடுத்து வந்தார்கள். இந்த 'இனாம்' ஒரு முழு கிராமமாகவோ, பல முழு கிராமங்களாகவோ, அல்லது ஒரு கிராமத்தில் குறிப்பிட்ட சில நிலங்களாகவோ இருக்கலாம். எல்லாவற்றிற்கும் 'இனாம்' என்றுதான் பெயர். அவ்விதம் அரசர்கள் தனிப்பட்ட நபர்களுக்குப் பல வித காரணங்களுக்காகவும் 'இனாம்' கொடுத்திருக்கிறார்கள்; கோயில்களுக்கும் இன்னும் பல தர்மங்களுக்கும் தர்ம ஸ்தாபனங்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். அரசர் ஒரு கிராமத்தையோ அல்லது ஒரு கிராமத்தில் சில நிலங்களையோ 'இனாம்' கொடுத்தார் என்றால் எதை 'இனாம்' கொடுத்தார் என்ற பிரச்னை உண்டாகின்றது. ஏற்கனவே ஒரு கிராமம் வேறு ஒருவருக்கோ பல பெயர்களுக்கோ சொந்தமாக இருந்தால் அரசர் அக்கிராமத்தை எப்படி 'இனாம்' கொடுக்க முடியும். அரசருக்கு அந்தக் கிராமத்தில் என்ன பாத்தியம் இருந்தது என்ற கேள்வி கிளம்புகின்றது. அரசருக்கு நிலவரி வசூல் செய்யும் பாத்தியம் நிச்சயம் உண்டு. அந்த பாத்தியத்தை அதாவது நிலத்தின் வரியை வசூல் செய்யும் பாத்தியத்தை, அதாவது 'மேல்வார'த்தை அவர் வேறு ஒருவருக்கு 'இனாம்' கொடுக்கலாம். அல்லது நிலமே அதாவது நிலத்தில் சாகுபடி செய்து அனுபவிக்கும் பாத்தியமே அரசரிடம் இருந்திருந்தால் அவர் நிலத்தையே இஷ்டப்பட்டவருக்கு 'இனாம்' கொடுக்கலாம்.

ஆங்கிலேயர் இந்நாட்டை ஆள ஆரம்பித்தவுடன் ஏற்கனவே மன்னர்களால்

கொடுக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான 'இனாம்'களை பரிசிலனை செய்து ஒப்புக் கொள்ளவேண்டியவைகளை ஒப்புக் கொள்ளவும், இனாம்தார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களின் பாத்தியத்தை நிர்ணயம் செய்யவும் 'இனாம் கமிஷன்' என்ற அதிகாரிகளை நியமித்தார்கள். இந்த இனாம் கமிஷன் எல்லா இனாம்தார்களின் பாத்தியத்தையும் அலசி பரிசிலனை செய்து அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட இனாம் தார்களுக்கு 'டைட்டில் டீட்' என்ற பாத்தியப் பத்திரம் கொடுத்தார்கள். மற்ற சரித்திரபூர்வமான விவரங்களையும், பலவகை இனாம்களுக்குள் உள்ள பல வித்தியாசங்களையும் நாம் இங்கு ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமில்லை. ஒன்றுமட்டில் தெரிந்து கொண்டால் போதும். அதாவது, இந்த இனாம் கிராமங்களிலும் சர்க்கார் க்விட் ரெண்ட் முதலிய வரிகளை இனாம்தாரிடமிருந்தேதான் வசூல் செய்யலாம். இனாம் கிராமங்களில் உள்ள நிலத்தின் சொந்தக்காரர் யார் என்று பார்க்கவேண்டிய அவசியம் சர்க்காருக்குக் கிடையாது. ஆனால் 'இனாம்' கிராமங்களில் உள்ள நிலங்களுக்கு யார் சொந்தக்காரர், இனாம்தாரா? அல்லது நிலத்தை சாகுபடி செய்பவரா? நிலமே இனாம்தாருக்குச் சொந்தமாக இருந்தால் அவர் வருடா வருடம் சாகுபடி செய்பவர்களை மாற்றலாம். இஷ்டப்படி குத்தகைத் தொகை ஏற்படுத்திக்கொண்டு வசூல் செய்யலாம். ஆனால் நிலங்கள், சாகுபடி செய்பவருக்குச் சொந்தமாக இருந்தால், அந்த நிலங்களுக்கு எப்படி அரசர் ஏற்கனவே தீர்வை வாங்கிவந்தாரோ அதைத்தான் இனாம்தார் "மேல்வாரமாக" வசூல் செய்யலாம். இவ்விதமான பிரச்னைகள் மிகப் பெரிதாக வளர்ந்து சர்க்கார் குறுக்கிட வேண்டிய அவசியம் நேர்ந்தது. தாற்காலிகமாய் சில சட்டங்கள் செய்து பிறகு சர்க்கார் 1908-ம் வருடத்தில் "எஸ்டேட் லாண்ட் ஆக்ட்" என்ற சட்டத்தை இயற்றினார்கள்.

எஸ்டேட் சட்டம்: எஸ்டேட் லாண்ட் ஆக்ட் ஏற்பட்டதின் காரணம் ஜமீன் கிராமங்களிலும், இனாம் கிராமங்களிலும், குடிகளுக்கும், அதாவது நிலத்தை சுவான் பாத்தியத்துடன் அனுபவிக்கும் 'ரயத்து'க்கும் ஜமீன்தார் அல்லது இனாம்தாருக்கும் உள்ள பாத்தியா பாத்தியங்களுக்கு வரம்பு கட்டி ஒழுங்குபடுத்தப்பட்டது. இச்சட்டத்தில் கட்டுப்பட்ட கிராமங்களுக்கு 'எஸ்டேட்' என்று பெயர். ஜமீன் கிராமங்கள் எல்லாம் 'எஸ்டேட்'டில் சேர்க்கப்பட்டது. ஆனால் எல்லா இனாம் கிராமங்களையும் "எஸ்டேட்" ஆக அப்பொழுது அச்சட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எந்த பூரா இனாம் கிராமங்களில் மேல்வார பாத்தியம் மட்டில் (குடிவார பாத்தியமில்லாதவருக்கு) 'இனாம்' கொடுக்கப்பட்டிருந்ததோ அந்த பூரா இனாம் கிராமங்களைமட்டில்தான் 1908 ஆம் வருடத்திய சட்டப்படி 'எஸ்டேட்'டில் சேர்க்கப்பட்டது. ஆகையால் எஸ்டேட் சட்டத்தில் முதலில் சேர்க்கப்பட்ட இனாம் கிராமங்கள் (1) பூரா கிராமமும் இனாமாக கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். (2) இனாம் தாருக்கு மேல்வாரம்மட்டில்தான் இனாமாக கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். (3) அந்த இனாம்தார் அந்த கிராமத்திய குடிவார பாத்தியம் உள்ளவராக இருந்திருக்கக்கூடாது. இந்த 3 லட்சணங்களும் பொருந்திய இனாம் கிராமங்களும், ஜமீன் கிராமங்களும்தான் 1936-க்கு முன் "எஸ்டேட்" என்று சொல்லப்பட்டன. இவைதான் இப்பொழுது வந்திருக்கும் புதுச் சட்டப்படி ஒழிக்கப்பட்டு திறப்பு கிராமங்களாக மாற்றப்படுகின்றன. இக் கிராமங்களிலுள்ள ஜமீன்தாரர்களும், இனாம்தாரர்களும் மறைந்துபோவார்கள். குடிக்காணி பாத்தியமுள்ளவர்கள் நேரடியாக சர்க்காரிடம் பட்டா பெற்று சர்க்காருக்கு நேரடியாக கிஸ்தி செலுத்துவார்கள். ஆனால் ஜமீன், இனாம் ஒழிப்புச்சட்டம் அமுலுக்கு வந்துவிட்டபடியால் ஜமீனார், இனாமும் இப்பொழுதே மறைந்துவிட்டன என்று நினைப்பது தவறு. இச்சட்டத்தை ஒவ்வொரு கிராமத்திற்காக தனித்தனியாக அமுலுக்குக் கொண்டுவர சர்க்காருக்குத்தான் பாத்தியமிருக்கிறது. பூர்வாங்கமான பல நடவடிக்கைகள் ஆரம்பித்து நடத்தவேண்டும். பல சச்சரவுகளும் பாத்தியங்களும் தீர்க்கப்படவேண்டும். இவைகளை என்ன என்று இச்சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

187686
600 003

(குறிப்பு: எந்த எந்த இனாம் கிராமங்களில் இனாம்தாரரின் பாத்தியம் ஒழிக்கப்படுகிறதென்று சொன்னோம். இவைகளைத் தவிர வேறு பலவகை இனாம் கிராமங்களும், 1936-ல் ஏற்பட்ட சட்டப்படி "எஸ்டேட்"டில் சேர்க்கப்பட்ட இனாம்களும் இருக்கின்றன. 1936-க்கு முன் "எஸ்டேட்" ஆக இருந்த இனாம் கிராமங்கள்தான் இப்பொழுது திறப்பாகும். மற்ற இனாம் கிராமங்களைப்பற்றி இங்கு விவரிக்கவேண்டிய அவசியமில்லாததினால் அவைகளைப்பற்றி தனியாக எழுதப்படும்.)

ஜமீன், இனாம் ஒழிப்புச் சட்டம் எந்த இனாம் கிராமங்களைப் பாதிக்காது: முன் சொல்லியபடி "எஸ்டேட்" என்பதில் 1936 திருத்தச் சட்டப்படி வேறு பல இனாம் கிராமங்களையும் சேர்க்கப்பட்டது. அதாவது இனாம்தாரே இருவாரத்திற்கும் பாத்தியமுள்ளவராக இருந்தாலும் அந்த கிராமம் பூரா இனாம் கிராமமாக இருந்தால், அதாவது ஒரு கிராமம் பூராவும் ஆதியில் இனாமாகக் கொடுக்கப்பட்டிருந்தால், அந்த கிராமத்தையும் 'எஸ்டேட்'டில் சேர்த்து எஸ்டேட் சட்டம் அக் கிராமங்களுக்கும் 1936-ல் அமுலுக்கு வந்தது. எஸ்டேட் சட்டப்படி ஒரு இனாம் கிராமத்தில் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களை (இனாம்தாரரின் சில சொந்த நிலங்களைத் தவிர) அனுபவிப்பவருக்கு 1936-ஆம் வருடச் சட்டம் குடிக்காணி பாத்தியத்தை புதிதாய் அளித்தது. குத்தகை வைத்துக் கொண்டோ அல்லது சாகுபடி செய்தோ இனாம் கிராம நிலங்களை அனுபவித்த பலர் 1936-ம் வருடச் சட்டப்படி நிலத்திற்குச் சொந்தக்காரர்களானார்கள். ஏற்கனவே நிலத்தின் சொந்தக்காரர் தாங்கள்தான் என்று நினைத்துக்கொண்டிருந்த பல இனாம்தார்கள் வெறும் மேல்வாரம்தாரர்கள் ஆனார்கள். இப்படி 1936-ல் 'எஸ்டேட்' சட்டத்தில் சேர்க்கப்பட்ட பூரா இனாம் கிராமங்கள் இப்பொழுது மாறாது. அவைகள் இப்புது சட்டத்தால் பாதிக்கப்படவில்லை. முதலில் இவைகளையும் ஒழித்துவிடவே சர்க்கார் மசோதாவில் கண்டிருந்தாலும் பலத்த ஆக்ஷேபணைகள் ஏற்பட்டதின்பேரில் கடைசியில் இந்தப் பூரா இனாம் கிராமங்களை இந்த ஒழிப்புச் சட்டத்திற்குள் கொண்டு வராமல் நிறுத்திக்கொண்டார்கள்.

ஜமீன் ஒழிப்புச் சட்டம் எப்பொழுது அமுலுக்குவரும்: பொதுவாய் இச்சட்டம் பாசாகிவிட்டாலும் சட்டத்தின் சில பாகங்களே இப்பொழுது உடனடியாக அமுலுக்கு வந்திருக்கின்றன. அதாவது சர்க்கார் உடனேயே எஸ்டேட் கிராமங்களை சர்வே செய்யவும் பாத்தியங்களை விசாரணை செய்யவும் அதிகாரிகளை நியமிக்கலாம்; விசேஷ கோர்டுகள் நியமிக்கலாம்; இச்சட்டத்திற்குட்பட்ட கிராமங்கள் எவை என்று தீர்மானிக்க ஏற்பாடு செய்யலாம்; சட்டத்திற்குட்பட்டு விதிகள் செய்யலாம். இந்த பூர்வாங்கமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒவ்வொரு ஜமீன் அல்லது இனாம் கிராமத்திற்கும் இச்சட்டம் எந்தத் தேதியில் அமுலுக்கு வரும் என்று சர்க்கார் தீர்மானித்து அதை சர்க்கார் கெஜட்டில் விளம்பரம் செய்வார்கள். அந்தத் தேதியில்தான் அதில் குறிப்பிட்ட ஜமீன்களும் இனாம்களும் ஒழிக்கப்பட்டதாக ஆகும்; அந்தத் தேதி முதல்தான் அதில் காணப்பட்ட கிராமங்கள் திறப்பு கிராமங்களாகும். அதற்கு முன்னால் ஆகாது. அதுவரை இப்பொழுதிருந்து வரும் எஸ்டேட் லாண்ட் ஆக்ட்தான் அவைகளுக்கும் பொருந்தும்.

இச்சட்டப்படி நியமிக்கப்படும் அதிகாரிகள்: (1) டைரக்டர் ஆப் செட்டில்மெண்ட் (2) செட்டில்மெண்ட் ஆபீசர். (3) எஸ்டேட் மானேஜர் (4) டிரிபுனல் என்ற தனிக் கோர்ட் (5) ஸ்பெஷல் டிரிபுனல் என்ற விசேஷ அப்பீல் கோர்ட். இந்த ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை அமுல் நடத்தவும் இதனால் எழுப்பப்படும் பிரச்னைகளையும் பாத்தியங்களையும் தீர்க்கவும் இந்த அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

ஒரு இனாம் கிராமம் இந்த சட்டத்திற்குள் வருமா என்று நிச்சயம்செய்ய: இச்சட்டத்தில் ஒரு முக்கியமான பிரச்னை என்னவென்றால் எந்த எந்த இனாம் கிராமங்கள் இச்சட்டத்

தால் திறப்பு கிராமமாக மாற்றப்பட வேண்டும் என்பதே. அதாவது, ஒரு இனும் கிராமம் 1936 திருத்தச் சட்டப்படி எஸ்டேட் ஆயிற்று; அல்லது அதற்கு முன்பே அது எஸ்டேட்தாளு என்பது. 1936-க்கு முன்பே ஒரு இனும் கிராமம் எஸ்டேட் ஆக இருந்தால்தான் இந்த இனும் ஒழிப்புச் சட்டம் அதை திறப்பு கிராமமாக்கும். இச்சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்படும் செட்டில் மெண்ட் ஆபீசரே இந்த பிரச்னையை முதன் முதல் தீர்க்க அதிகாரமுள்ளவர். அவர் தானாகவே தன் எல்லைக்குட்பட்ட இனும் கிராமங்களில் எந்தெந்த கிராமங்கள் இச்சட்டத்திற்குள்ளாகும் என்று தீர்மானிக்கலாம். அல்லது அவ்விதம் அவர் தீர்மானம் செய்ய வேண்டுமென்று அக்கறை உள்ளவர்கள் அவருக்கு மனுவும் செய்யலாம். அப்படி தீர்மானம் செய்யுமுன் அவர் அக்கிராமத்தில் பிரசுரம் செய்து, சம்பந்தப் பட்டவர்களுடைய ஸ்டேட்மெண்ட்களை தன்னிடம் தாக்கல் செய்யும்படி கேட்பார். பிறகு சம்பந்தப் பட்டவர்களை விசாரணை செய்து, வாக்கு மூலங்கள் வாங்கி, தஸ்தவேஜிகளை ஏற்றுக் கொண்டு, சர்க்கார் வசமுள்ள தஸ்தவேஜிகளையும் பரிசீலனை செய்துபார்த்து கடைசியில் எழுத்து மூலம் இந்த கிராமம் இந்த ஒழிப்புச் சட்டத்தின் கீழ்வரக்கூடிய இனும் கிராமமா அல்லவா என்று தீர்ப்புச் செய்வார்.

செட்டில்மெண்ட் ஆபீஸரின் தீர்ப்பின் பேரில் அப்பீல் உண்டு: செட்டில்மெண்ட் ஆபீசர் இவ்விதம் செய்த தீர்ப்பின்பேரில் சம்பந்தப்பட்டவர் "டிரிபுனல்" என்ற தனிக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். இந்த (டிரிபுனல்) கோர்ட் என்பது இச் சட்டத்திற்காக சர்க்காரால் நியமிக்கப் படும். இவ்விதம் சர்க்கார் பல டிரிபுனல்களை நியமிக்கலாம். ஒவ்வொரு டிரிபுனலிலும் மூன்று அங்கத்தினர்கள் இருப்பார்கள். அதில் ஒருவர் ஜில்லா ஜட்ஜ் அந்தஸ்துள்ளவர். இவரே டிரிபுனலின் அக்கிராசனர். மற்ற இருவரில் ஒருவர் சப்ஜட்ஜ் அந்தஸ்துள்ளவராகவும், மற்றொருவர் சப்கலெக்டர் அல்லது டிப்டி கலெக்டர் அந்தஸ்துள்ளவராகவும் இருப்பார். எந்த எந்த டிரிபுனலுக்கு எந்த எந்த எஸ்டேட்களின் பேரில் அதிகாரமென்று சர்க்கார் நிர்ணயம் செய்வார்கள்.

இந்த டிரிபுனல் கோர்ட்டுகளுக்கு சாக்ஷிகளை சம்மன் செய்யும் விஷயத்திலும் தஸ்தாவேஜிகளை ஆஜர்படுத்தச் செய்யும் விஷயத்திலும் சிவில் கோர்ட்டுக்குள்ள அதிகாரம் உண்டு. சம்பந்தப்பட்டவருடைய அப்பீல் மனு தாக்கலானபிறகு எந்த இனும் கிராம சம்பந்தமாய் அப்பீல் கொடுக்கப் பட்டிருக்கிறதோ அந்த கிராமத்தில் விளம்பரம் செய்து, செட்டில்மெண்ட் ஆபீசரிடம் ஏற்கனவே அக்கிராம சம்பந்தமாய் மனுக் கொடுத்தவர்களையும் வாக்கு மூலம் கொடுத்தவர்களையும் ஆஜராக சந்தர்ப்பமளித்து டிரிபுனல் கோர்ட்டார் அப்பீலை முடிவுசெய்வார்கள். இவ்விதம் டிரிபுனல் கோர்ட்டால் ஒரு இனும் கிராமம் இந்த ஒழிப்புச்சட்டத்திற்குட்பட்டதா இல்லையா என்று அளிக்கப்பட்ட அப்பீல் தீர்ப்புத் தான் இந்த விஷயத்தில் முடிவான தீர்ப்பு. அதை மாற்றவோ தவறு என்று சொல்லவோ சிவில் கோர்ட்டுகளுக்கும் அதிகாரமில்லை. அப்பீல் செய்யப்படாத நிலைமையில் செட்டில்மெண்ட் ஆபீசருடைய தீர்ப்பேதான் இவ்விஷயத்தில் முடிவான தீர்ப்பு.

இவ்விதம் ஏற்பட்ட முடிவான தீர்ப்பில் மற்றும் ஒரு விசேஷம் உண்டு. ஒரு இனும் கிராமத்தைப்பற்றி செட்டில்மெண்ட் ஆபீசரோ, அப்பீல் இருந்தால் டிரிபுனல் கோர்ட்டோ, செய்யும் தீர்மானம் அக்கிராமத்தில் எவ்வித பாத்தியமுள்ளவர்களையும் கட்டுப்படுத்தும். மனுப்போடாதவர்களையும் ஸ்டேட்மெண்ட் கொடுக்காதவர்களையும், விசாரணையில் சம்பந்தப்படுத்திக்கொள்ளாதவர்களையும் கூட கட்டுப்படுத்தும். மேலும் ஒரு முக்கியமான விதி என்னவென்றால், செட்டில்மெண்ட் ஆபீசரோ, டிரிபுனல் கோர்ட்டோ, வேறு போதுமான ருசுக்களும், சாக்ஷியங்களும் இல்லாவிட்டால், அந்த இனும் கிராமம் இச்சட்டப்படி திறப்பாக மாற்றப்பட வேண்டிய 'எஸ்டேட்'

கிராமம் என்று வைத்துக்கொண்டு முடிவு செய்யலாம். அதாவது ஒரு இனும் கிராமம் 1936-ல்தான் 'எஸ்டேட்' ஆக சேர்க்கப் பட்டது; அதற்கு முன் அக்கிராமத்தில் வேறு ஒருவருக்கும் குடிக்காணி பாத்தியம் இல்லே என்று அக்கரையுள்ள இனும்தார் ருசுவிடவேண்டும். அப்படி ருசு செய்தால் தான் அக்கிராமம் இந்த ஒழிப்புச் சட்டத்தி லிருந்து தப்பமுடியும்.

இனும் (அல்லது ஜமீன்) ஒழிக்கப்பட்டால் யாருக்கு சர்க்காரால் பட்டா கொடுக்கப்படும்: பொதுவாக ஒரு 'எஸ்டேட்'டில் (அதாவது ஜமீன் அல்லது இச்சட்டத்திற் குட்பட்ட இனும் கிராமத்தில்) குடிக்காணி பாத்தியமுள்ள ஒவ்வொரு ரயத்துக்கும் அவரவருடைய குடிக்காணி நிலங்களுக்கு சர்க்காரால் பட்டா கொடுக்கப்படும். ஆனல் ஜமீன்தாரிடமோ இனும்தாரிடமோ 1—7—1945-ல் அல்லது அதற்குப் பிறகு ஒருவர் நிலங்களே சாகுபடிக்கு ஒப்புக் கொண்டிருந்தால் அவருக்கு சாதாரணமாய் பட்டா கொடுக்கப்படமாட்டாது. இருந்தாலும் சர்க்கார் இவர் சம்பந்தமான விஷயங்களேயும் பரிசிலனே செய்து இவருக்கே பட்டா கொடுக்க வேண்டுமென்றும் உத்திரவு செய்யலாம். மேலும் சர்க்கார் விளம்பரத் தேதிக்குமுன் ஒரு ஜமீன் அல்லது இனும் கிராமத்தில் ரயத்துக்களிடமிருந்து மேல்வாரத்தை வசூல் செய்யும் பாத்தியத்தை குத்தகைக்கு ஒப்புக்கொண்டிருப்பவருக்கு யாதொரு பட்டாவும் கொடுக்கப் படமாட்டாது.

சில நிலங்களுக்கு ஜமீன்தாருக்கும் இனும் தாருக்கும் பட்டா: ஜமீன் எஸ்டேட்களில் சில நிலங்களுக்கு ஜமீன்தாருக்கும், இனும் கிராமங்களில் சில நிலங்களுக்கு இனும் தாருக்கும் பட்டா கொடுக்கப்படும்.

அதாவது: (1) சர்க்கார் விளம்பரத் தேதிக்கு முன் ஜமீன்தார் அல்லது இனும் தாருக்கு சொந்த உபயோகத்திற்காக உள்ள (ப்ரைவேட் லாண்ட்) நிலங்கள்;

(2) ஏற்கனவே குடிக்காணி பாத்திய முள்ள ஒரு ரயத்தின் நிலமாக இருந்து அதை ஜமீன்தாரோ இனும்தாரோ வார்சு முறைமையில் அல்லது உயில் மூலம் அடைந்து அது முதல் தொடர்ச்சியாய் ஜமீன் தாரே அல்லது இனும்தாரே நேரில் அதாவது பண்ணேயில் அல்லது கூலி வேலேயைக் கொண்டு சாகுபடி செய்து அனுபவித்து வந்திருந்தால் அந்த நிலங்களுக்கு ஜமீன் தார் அல்லது இனும்தாருக்கு பட்டா கொடுக்கப்படும்; (இவ்விதம் அனுபவிப்பது ஜமீன்தாராக இருந்தால் 1—7—1939 முதலும், இனும்தாராக இருந்தால் 1—7—1945 முதலும் இருந்தாலும் போதும்)

(3) ஏற்கனவே குடிக்காணி பாத்திய முள்ள ஒரு ரயத்தின் நிலமாக இருந்து அதை ஜமீன்தாரோ, இனும்தாரோ, கிரயம், பரிவர்த்தனே அல்லது தான சாசனம் அல்லது மேல்வார பாக்கிக்காக போடப்பட்ட ஏலம் மூலம் அடைந்து 1—7—1945 முதல் அந்த நிலங்களே நேரில் - பண்ணேயிலோ, அல்லது கூலி வேலேயைக் கொண்டோ - தொடர்ச்சியாய் அனுபவித்துவரும் நிலங்களுக்கும் ஜமீன் தார் அல்லது இனும்தாருக்கே பட்டா கொடுக்கப்படும்.

(4) ஒரு ஜமீன் அல்லது இனும் கிராமத்தில் ஒரு ரயத்து தனக்குத் தேவையில்லே என்று கைவிட்ட நிலங்களுக்கும் எக்காலத்திலும் யாதொரு ரயத்தாலும் அனுபவிக்கப் படாத நிலங்களுக்கும் ஜமீன்தாருக்கோ, இனும்தாருக்கோ பட்டா கொடுக்கப்படும். ஆனல் ஜமீன்தார் இந்த நிலங்களே 1—7—39 முதலும், இனும்தார் இவைகளே 1—7—45 முதலும் தொடர்ச்சியாய் நேரில், பண்ணேயிலோ, கூலிவேலேயைக்கொண்டோ அனுபவித்து வந்திருக்கவேண்டும்.

மேற்கண்ட ஷராக்களில் ஜமீன்தாரோ அல்லது இனும்தாரோ நேரில் அனுபவித்து வந்திருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஒரு நிலத்தில் தோப்பு பயிர் செய்தாலும், தோட்டம் போட்டாலும் நேரில் அனுபவித்ததாகவேதான் ஆகும். ஆனல் மரங்கள் தானுகவே வளர்ந்திருந்தால் ஜமீன்தார் அல்லது இனும்தார் அனுபவித்ததாக ஆகாது.

ஜமீன்தார் அல்லது இனாம்தாருக்கு பட்டா கொடுக்கலாமா என்று செட்டில்மெண்ட் ஆபீசர் பரிசீலனை செய்வார்: ஜமீன்தார் அல்லது இனாம்தார் தனக்கு பட்டாசெய்துகொடுக்க வேண்டுமென்று கேட்கும் நிலங்களின் தன்மையைப்பற்றி செட்டில்மெண்ட் ஆபீசர் பரிசீலனை செய்து அப்படி அவருக்கு பட்டா கொடுக்கலாமா, கூடாதா என்று தீர்ப்புச் செய்வார்.

ஜமீன்தார் அல்லது இனாம்தாரும் அதன் பேரில் அப்பீல் செய்யலாம்: செட்டில்மெண்ட் ஆபீசர் தனக்கு பட்டா கொடுக்க மறுத்தால், ஜமீன்தாரோ இனாம்தாரோ ஏற்கனவே பிரஸ்தாபிக்கப்பட்ட "டிரிபுனல்" கோர்ட்டுக்கு இரண்டு மாதத்தில் அப்பீல் செய்யலாம். (இந்த இரண்டு மாதத்திற்குமேல் தாமதமானாலும் டிரிபுனல் இஷ்டப்பட்டால் அப்பீலை ஏற்றுக்கொள்ளலாம்.) இது விஷயத்திலும் 'டிரிபுனல்' செய்யும் தீர்ப்புதான் முடிவானது. அது தவறு என்று சொல்லி சிவில் கோர்ட்டுகளில் நடவடிக்கை தொடர முடியாது.

பட்டாதார்கள், விளம்பரத் தேதிமுதல், சர்க்காருக்கு நிலவரி கொடுக்கவேண்டும்: இப்படி குடிக்காணி உள்ள ரயத்துக்களுக்கோ, ஜமீன்தாருக்கோ, இனாம்தாருக்கோ பட்டாக் கொடுத்தபிறகு, சர்க்கார் செய்யும் விளம்பரத் தேதி முதல், இவர்கள் நேரடியாக சர்க்காருக்கு நிலத் தீர்வை முதலியவைகளைச் செலுத்தவேண்டும்.

ஊழியம் அல்லது சேவைக்காக விடப்பட்ட நிலங்களுக்கு யாருக்குப் பட்டா: ஏதாவது ஒரு ஊழியம் அல்லது சேவை செய்து வருவதற்காக பிரதிப்பிரயோஜனமாக எஸ்டேட் நிலங்கள் ஒருவருக்கு விடப்பட்டு அவர் மேல்வாரமே இல்லாமலோ அல்லது குறைவான மேல்வாரம் கொடுத்துக்கொண்டோ அவருக்கு ஏற்பட்ட ஊழியம் அல்லது சேவையை செய்து கொண்டு அனுபவித்துவரும் நிலங்களுக்கு பட்டா யாருக்குக்கொடுப்பது என்ற பிரச்னை கிளம்புகிறது. இந்த ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டப்படி இவ்விதமான நிலங்கள் இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது (1) நிலத்தை அனுபவிப்பவர் செய்ய வேண்டிய ஊழியம் ஜமீன்தார் அல்லது இனாம்தாருடைய சொந்த சௌகரியத்திற்காகவும் மற்றவருக்கு சம்பந்தமில்லாமலும் செய்யப்படவேண்டிய ஊழியமாய் இருந்தால், நிலத்தை அனுபவிப்பவருக்கு சர்க்காரால் பட்டா கொடுக்கப்படும். பட்டா கொடுக்கப்பட்ட பிறகு இவர் எவருக்கும் எவ்வித ஊழியமும் செய்யவேண்டியதில்லை. (ஆனால் மேல்வாரம் தார் ஒரு கோயிலாகவோ, கல்வி அல்லது தர்மஸ்தாபனமாகவோ இருந்தால் இந்தவிதி பொருந்தாது). (2) அப்படி இல்லாமல் வேறுவகை ஊழியம் அல்லது சேவை செய்வதற்காக எஸ்டேட் நிலத்தை ஒருவர் அனுபவித்துக் கொண்டிருந்தால் அவருக்கு, இப்பொழுது திறப்பு கிராமங்களில் மைனர் சர்விஸ் இனாம்தார்களுக்கு என்ன பாத்தியம் இருக்கிறதோ அதே பாத்தியம் அவர்களுக்கும் இருக்கும். அவர்களும் தாங்கள் செய்யவேண்டிய சேவையை செய்துவரவேண்டும்.

இவ்விதம் ஊழியம் அல்லது சேவைக்காக விடப்பட்ட ஒரு பூரா கிராமமாக இருந்தால் அதிலுள்ள காடுகளுக்கும், குளம், பாய்கால், வடிகால், களம், மந்தைமேடு, கிராமநத்தம் முதலிய நிலங்களுக்கும் எவருக்கும் பட்டா கொடுக்கப்பட மாட்டாது.

(தொடரும்)

மாஜிஸ்டிரேட் வீட்டில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அச்சமயம் ஒரு ஆள் வேலை தேடி வந்தான்.

வேலைக்காரன்: தங்கள் வீட்டு வேலைக்கு ஒரு ஆள் வேண்டுமென்றீர்களாம். மாதம் என்ன கொடுப்பீங்க, எஜமான்?

மாஜிஸ்டிரேட்: (ஞாபகமறதியாக) இருபது ரூபாய் அல்லது மூன்று வாரம் கடுங்காவல்.

*

பப்ளிக் பிராஸிகியூட்டர்: இந்த குற்றவாளி இதோடு எட்டு முறை கோர்ட்டார் முன் நின்றிருக்கிறானென்பதை விண்ணப்பித்துக் கொள்கிறேன்,

குற்றவாளி: எசமான்! இவுங்க நூற்றுக் கணக்கான முறை இந்தக் கோர்ட்டார் முன்பு நின்றிருக்கிறாங்க என்பதை தாங்கள் அறிய விரும்புகிறேன்.

*

விற்பனை வரி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

S. சாம்பசிவய்யர் B. A., B. L.

சென்ற இதழில் விற்பனை வரி என்பது வியாபாரிகள் மொத்த விற்பனையின் பேரில் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய வரி என்றும், ஒரு வருடத்தில் ரூ. 10,000-க்குள் மொத்த வியாபாரம் செய்திருப்பவர்கள் விற்பனைவரி கொடுக்கவேண்டியதில்லை என்றும், ஆனால் ஒரு வருடத்தில் ரூ. 7500க்குக் குறையாமல் மொத்த வியாபாரம் செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் கட்டாயமாக ஏ. ஸி. டி. ஓ. விடம் மனுச்செய்து தங்களை ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டுமென்றும் சில வியாபாரிகள் குறிப்பிட்ட சாமான்களை விற்க அதற்குள்ள கட்டணம் கட்டி லைசென்சு வாங்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. இனி இதுவிஷயமாய் வியாபாரிகள் செய்யவேண்டிய மற்ற விஷயங்களைக் கவனிப்போம்.

வியாபாரிகள் தாங்களாகவே ரிடர்ன் அனுப்பவேண்டும்: வருடத்தில் ரூ.10,000 அல்லது அதற்குமேல் மொத்த வியாபாரம் உள்ள ஒவ்வொரு வியாபாரியும் தானகவே (அதாவது இது விஷயமாய் அதிகாரிகளிடமிருந்து யாதொரு நோட்டீசும் வராவிட்டாலுங்கூட) விற்பனை அதிகாரிக்கு "ரிடர்ன்" என்று சொல்லப்படும் தன் மொத்த வியாபாரத் தொகையைக்கண்டு தாக்கல் கொடுக்க வேண்டும். ரிடர்ன் கொடுக்காமல் இருப்பது குற்றமாகும். வருடத்தில் மொத்த வியாபாரம் ரூ. 20,000-க்கு மேல் போகாமல் இருந்தால் ஏ. ஸி. டி. ஓ. வுக்கும், அதற்கு மேல் இருந்தால் டி. ஸி. டி. ஓ. வுக்கும் ரிடர்ன் அனுப்பவேண்டும். ஆனால் ஒரு ஜில்லாவில் பல தாலூகாக்களில் வியாபாரம் நடத்தும் வியாபாரிகளும், பல ஜில்லாக்களில் வியாபாரம் நடத்தும் வியாபாரிகளும் தலைமை ஆபீஸ் எங்கிருக்கிறதோ அந்த இடத்தின் டி. ஸி. டி. ஓ. வுக்குத்தான் ரிடர்ன் அனுப்பவேண்டும். முதல் முதலில் வியாபாரம் ஆரம்பிக்கும் வியாபாரி தனக்கு ஒரு வருடத்தில் உத்தேசமாய் மொத்த வியாபாரம் ரூ. 10,000-க்குக் குறையாதென்று தோன்றினல் வியாபாரம் ஆரம்பித்த 30 தினங்களுக்குள் ரிடர்ன் அனுப்ப வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், முதல் 12 மாதத்திற்குள் எந்த மாதத்தில் மொத்த வியாபாரம் ரூ. 10,000-த்தைத் தொடுகிறதோ அந்தத் தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் ரிடர்ன் அனுப்பவேண்டும். இந்த ரிடர்ன் நமூனு A 1 படி இருக்க வேண்டும். அதில் அந்த வருடத்தில் ஏற்பட்ட அல்லது ஏற்படக்கூடிய மொத்த விற்பனைத் தொகையைக் குறிக்கவேண்டும். இதை வைத்துக்கொண்டு விற்பனைவரி அதிகாரி தாற்காலிகமாய் விற்பனைவரிவிதிப்பார். வியாபாரி ரிடர்ன் அனுப்பாவிட்டாலும் அனுப்பிய ரிடர்ன் சரியல்ல என்று தோன்றினலும், விற்பனைவரி அதிகாரி தேவையான விசாரணை செய்து தனக்கு நியாயம் என்று தோன்றிய வரியை விதிக்க அதிகாரமுண்டு. விதிக்கப்பட்ட வரியை 12 மாதங்களில் மாதா மாதம் 12-ல் 1 பாகமாக வியாபாரி செலுத்திவர வேண்டும். ஒரு வருடம் முடிந்த பிறகு (வருடம் என்பது ஏப்ரல் மாதம் 1-ம் தேதிமுதல் அடுத்த வருடம் மார்ச்சு மாதம் 31-ம் தேதிமுடிய உள்ளது) பிரதி வருடம் மே மாதம் 1-ம் தேதிக்குள் ஒவ்வொரு வியாபாரியும் முந்திய வருடத்தில் தனக்கு கணக்குப்படி சரியாய் எவ்வளவு மொத்த வியாபாரம் நடந்திருக்கிறதென்று ரிடர்ன் அனுப்பவேண்டும். இதை வரிஅதிகாரி ஒப்புக்கொண்டால் அந்த வருஷத்திற்கு அந்த வியாபாரி கொடுக்க வேண்டிய வரியை முடிவாய் விதிப்பார். இவ்விதம் ரிடர்ன் அனுப்பாவிட்டாலும், அனுப்பிய ரிடர்ன் சரியல்ல என்று தோன்றினலும், விற்பனைவரி அதிகாரி விசாரணை செய்து தனக்குத் தோன்றிய நியாயமான வரியை முடிவாக விதிப்பார். இப்படி முடிவாய் விதிக்கப்பட்ட வரி தாற்காலிகமாய் ஏற்கனவே விதிக்கப்பட்ட வரியைவிட ஜாஸ்தியாக இருந்தால் பாக்கியை வியாபாரி

குறிப்பிட்டகாலத்திற்குள் செலுத்த வேண்டும். தாற்காலிக வரியைவிட முடிவாய்ப் போட்டவரி குறைவாக இருந்தால் வியாபாரியால் அதிகமாய்ச் செலுத்தப் பட்டிருப்பதை சர்க்காரிடமிருந்து வியாபாரி வாப்ஸ் பெறலாம். இப்படி முதல் வருடத்திற்கு முடிவாய் ஏற்பட்ட வரியை ஆதாரமாய் வைத்துக்கொண்டு அடுத்த வருடத்திற்கு தாற்காலிக வரி போடப்படும்.

ரூ. 20,000 மொத்த வியாபாரமுள்ள வியாபாரிகள் வேறு முறையில் வரி செலுத்தலாம் : மேலே சொல்லப்பட்டதில் ஒவ்வொரு வியாபாரிக்கும் ஒருவருடத்தில் இரண்டு தடவை வரி நிஷ்கர்ஷிக்கப்படுகிறது. அதாவது, முதலில் உத்தேசமாய் ஏற்படக்கூடிய மொத்த விற்பனைத் தொகையை ஆதாரமாகக்கொண்டு அதற்குள்ளவரி விதிக்கப்பட்டு வியாபாரி அதை மாதாமாதம் செலுத்திவருகிறார். மார்ச் மாதம் 31-ம் தேதி முடிந்ததும் ஒரு வருடக் கணக்குப் பார்த்து ஏற்பட்ட தொகையின்பேரில் பிறகு முடிவான வரி விதிக்கப்படுகிறது. இந்த முறையில் தொந்திரவு இருப்பதாய், ரூ. 20,000-க்கு குறையாமல் மொத்த வியாபாரம் ஆகும் ஒரு வியாபாரிக்குத் தோன்றினால் அவர் வேறு ஒரு முறையை அனுஷ்டிக்கலாம். இந்த முறைப்படி அவர் உத்தேசக் கணக்கு கொடுக்கவேண்டியதில்லை. ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் அதற்கு முந்திய மாததில் கணக்குப்படி சரியாக என்ன மொத்த வியாபாரம் நடந்திருக்கிறதென்பதையும், அந்த மாதத்தில் விற்பனை வரி என்று தன்னால் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறதென்பதையும் கண்டு A 3 நமூனைப்படி ரிடர்ன் கொடுக்கலாம். ஆனால் அப்படிக் கொடுக்கும் ரிடர்னுடன் அதற்குள்ள வரியை சர்க்கார் கஜானாவில் கட்டிய ரசீதையோ அல்லது அத்தொகைக்கு செக்கையோ சேர்த்து அனுப்பவேண்டும். வரி விதிக்கும் அதிகாரி அவருடைய கணக்கையும், செலுத்திய வரியையும் சரி என்று ஏற்றுக்கொள்ளலாம். அப்படி அனுப்பிய ரிடர்ன் பிசகென்று தோன்றினாலும், ரிடர்னுடன் வரி செலுத்தப்படாவிட்டாலும் வரி விதிக்கும் அதிகாரி விசாரணை செய்து தனக்கு நியாயமாய்த் தோன்றும் வரியை விதிப்பார். ஆனால் இந்த முறையை வருடத்தில் ரூ. 20,000 அல்லது அதற்குமேல் மொத்த வியாபாரமுள்ளவர்கள்தான் இஷ்டப்பட்டால் அனுஷ்டிக்கலாம்.

அப்பீல் உண்டு : ஏ. ஸி. டி. ஓ. என்பவர் ஒரு வருடத்தில் மொத்த வியாபாரம் ரூ. 20,000-க்கு மேற்படாத வியாபாரிக்கு வரி விதிக்கும் அதிகாரி. மொத்த வியாபாரம் ரூ. 20.000-க்கு மேற்பட்டால் டி. ஸி. டி. ஓ. தான் வரி விதிக்கும் அதிகாரி. இவ்விரு அதிகாரிகளின் வரி விதிப்பு உத்திரவின்பேரில் அப்பீல் செய்ய வேண்டுமானால் அந்த ஜில்லா ஸி. டி. ஓ. என்ற கம்மர்சியல் டாக்ஸ் ஆபீசருக்கு அப்பீல் செய்ய வேண்டும். வரி விதிக்கும் ஆர்டர் கிடைத்த 30 தினங்களுக்குள் அப்பீல் தாக்கல் செய்யவேண்டும். அப்பீல் மனுவில் அப்பீல் செய்பவரின் பெயர், விலாசம், எந்த உத்திரவின்பேரில் அப்பீல் செய்யப்படுகிறதோ அதன் தேதி இவைகளைக் காண வேண்டும். மேலும் முக்கியமான விஷயங்களைத் தெளிவாய்க் கண்டிருக்கவேண்டும். என்ன பரிகாரம் தேவை என்பதையும் எழுதவேணடும். அப்பீல் செய்பவர் பிரமாண உறுதிமொழியுடன் கையெழுத்துச் செய்யவேண்டும். அப்பீல் மனுவை ஸி. டி. ஓ. வுக்கு அனுப்பும்பொழுது அத்துடன் எந்த உத்திரவின்பேரில் அப்பீல் செய்யப்படுறதோ அதன் அசலையாவது, சர்டிபைட் காபியையாவது சேர்த்து அனுப்ப வேண்டும். அதை அனுப்ப முடியாவிட்டால், அது ஏன் அனுப்பப்படவில்லை என்று அப்பீல் அதிகாரிக்குச் சரியான காரணம் சொல்லவேண்டும். மேலும் அப்பீல் செய்பவர் ஒப்புக்கொள்ளும் வரியை கஜானாவில் கட்டியோ, வேறுவிதமாய்ச் செலுத்தியோ அதற்குள்ள ரசீதையும் அப்பீல் மனுவுடன் அனுப்பவேண்டும். அப்பீல் மனுவை தபால்மூலமும் அனுப்பலாம். அல்லது ஸி. டி. ஓ. விடமாவது, அவரால் இதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடமாவது அப்பீல் மனுவை நேரில் அப்பீல் செய்பவரோ, அவர் ஏஜண்டோ, வக்கீலோ

கொடுக்கலாம். அப்பீல் விசாரணைத் தேதியை அப்பீல் செய்தவருக்கு தெரிவித்து அவர் சொல்லவேண்டிய விஷயங்களைச் சொல்ல சந்தர்ப்பமளித்து ஸி. டி. ஓ. அப்பீலை முடிவுசெய்வார்.

அப்பீலுக்கு மேல் "ரிவிஷன்" மனுக்கொடுக்கலாம்: விற்பனை வரிச் சட்டப்படி அதிகாரமுள்ள எந்த அதிகாரியாலும் ஏற்பட்ட எவ்விதமான உத்திரவுகளையும் வரவழைத்து அவைகள் சட்டப்படி இருக்கின்றனவா என்றும், ஒழுங்காக இருக்கின்றனவா என்றும் பரிசிலனை செய்து பார்க்க ரிவன்யூ போர்ட்டுக்கு அதிகாரமுண்டு. அவர்களாக இப்படி எந்தக் காலத்திலும் பரிசிலனை செய்யலாம். ரிவன்யூ போர்டாரை இவ்விதம் ஒரு அதிகாரியின் உத்திரவை பரிசிலனை செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர் ரிவிஷன் மனு கொடுக்கலாம். அப்படி ரிவிஷன் மனு கொடுப்பதாக இருந்தால் உத்திரவு ஏற்பட்ட 6 மாத காலத்திற்குள் கொடுக்கப்படவேண்டும். ரிவன்யூ போர்டுக்கு உள்ள ரிவிஷன் அதிகாரம் (1) டிப்டி கமிஷனர் ஆப் கமர்சியல் டாக்ஸஸ் (2) கமர்சியல் டாக்ஸ் ஆபிசர் (ஸி. டி. ஓ.) இருவர்களுக்கும் அவரவர்களுக்குக் கீழ்பட்ட உத்தியோகஸ்தருடைய உத்திரவுகளை ரிவிஷன் செய்ய அதிகாரமுண்டு. சம்பந்தப்பட்டவர்கள் இவர்களுக்கும் "ரிவிஷன்" மனு 6 மாதத்திற்குள் போடலாம். (ஆனால் ரூ. 20,000 க்கு மேற்பட்ட மொத்த வியாபாரமுள்ள வியாபாரி ஸி. டி. ஓ வுக்கு அப்பீல் செய்து அதன்பேரில் ஸி. டி. ஓ. செய்யும் அப்பீல் தீர்ப்பின்பேரில் டிப்டி கமிஷனருக்கு 'ரிவிஷன்' அதிகாரம் கிடையாது.)

'அப்பீல்' என்பதற்கும், 'ரிவிஷன்' என்பதற்கும் சட்டத்தில் வித்தியாசமுண்டு. அப்பீல் அதிகாரம் செலுத்தும் அதிகாரி கீழ் அதிகாரியின் உத்திரவு சட்டத்திற்கு ஒத்ததல்ல என்ற காரணத்தைக் கொண்டாவது அல்லது கீழ் அதிகாரி விஷயங்களின் உண்மையைச் சரிவர கண்டுபிடிக்கவில்லை என்ற காரணத்தைக்கொண்டாவது அவ்வுத்திரவை மாற்றலாம். ஆனால் ரிவிஷன் அதிகாரம் உள்ள அதிகாரி சட்ட சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்மானிக்கலாம். அவர் விஷயங்களை அதிகமாய் உட்புகுந்து பரிசிலனை செய்யமாட்டார். கீழ் அதிகாரியின் உத்திரவு சட்டத்தை அனுசரித்தும் முறைப்படியும் செய்யப்பட்டிருக்கிறதா என்றுதான் கவனிப்பார். அப்பீல் அல்லது ரிவிஷனின் முடிவு மனுதாருக்குத் தெரிவிக்கப்படும்.

அப்பீல்-ரிவிஷன் இரண்டிலும் வரியை ஜாஸ்தி செய்யவும் செய்யலாம்: வரிபோட்டது ஜாஸ்தி என்று ஒரு வியாபாரி எ. ஸி. டி. ஓ. அல்லது டி. ஸி. டி. ஓ. வின் உத்தரவின்பேரில் ஸி. டி. ஓ. வுக்கு அப்பீல் செய்தாலும் அவருக்கும் உயர்ந்த டிப்டி கமிஷனர் அல்லது ரெவின்யூ போர்டாருக்கு ரிவிஷன் மனு செய்தாலும், அந்த அப்பீல் அல்லது ரிவிஷன் மனுவை விசாரிக்கும் அதிகாரிக்கு ஏற்கனவே போடப்பட்ட வரி குறைவாக இருக்கிறதென்று தோன்றினல் அவர் சட்டப்படி எவ்வளவு வரி போட வேண்டுமோ அதை விதிக்கலாம்.

ரிஜிஸ்ட்ரேஷன், லைசென்சு இவை சம்பந்தப்பட்ட உத்திரவுகளின் பேரிலும் அப்பீலும் ரிவிஷனும் உண்டு: ஒரு வருட விற்பனைத் தொகை ரூ. 7500 அல்லது அதற்கு மேல் உள்ள வியாபாரி ஒவ்வொருவரும் தன்னை கட்டாயமாய் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ளவேண்டுமென்றும் அதற்காக எவ்வளவு வருமானமுள்ளவரும் எ. ஸி. டி. ஓ. வுக்குத்தான் மனுப் போடவேண்டும் என்றும் ஏற்கனவே சொன்னேம். மேலும் குறிப்பிட்ட சில சாமான்களை விற்பனை செய்யும் வியாபாரிகளும், கமிஷன் ஏஜண்டுகளும் லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னேம். வியாபாரி விற்பனை வரி கொடுப்பவராக இருந்தால் அவருக்கு வரி விதிப்பவர் யாரோ அவரிடமும், மற்றவர்கள் எ. ஸி. டி. ஓ. விடமும் மனுக் கொடுத்து லைசென்சு பெறவேண்டும். இப்படி ரிஜிஸ்தர், லைசென்சு, இரண்டு விஷயங்களைப் பற்றியும் முதல் அதிகாரி செய்யும் உத்தரவின் பேரில் மேற்கண்டபடி அப்பீலும் ரிவிஷனும் உண்டு.

முடிவான உத்திரவின் பேரில்தான் அப்பீலும் ரிவிஷனும் உண்டு: அதாவது உதாரணமாக ஏ. ஸி. டி. ஓ. ஒரு வியாபாரியை கணக்குகள் தாக்கல் செய்யவும் அல்லது நேரில் ஆஜராகவும் தாற்காலிகமாய் விதிக்கப்பட்ட வரி கொடுக்கவும் உத்திரவு செய்தால் இது முடிவான உத்திரவல்ல. இதன் பேரில் அப்பீலும் ரிவிஷனும் கிடையாது. ஆனால் முடிவாக வரி விதித்தால் அதன் பேரில் அப்பீல், ரிவிஷன் உண்டு. லைசென்சு கொடுக்க முடிவாக மறுத்தாலும் அப்பீலும் ரிவிஷனும் உண்டு.

விற்பனை வரிச் சட்டமே சில சாமான்களின் விற்பனைக்கு கிடையாது: அதாவது (1) எலெக்ட்ரிக் விசை-சக்தி. (2) பெட்ரோல் எண்ணை. (3) புகையிலை-எந்த ரூபத்திலும் எவ்வித வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும். உதாரணம்: பொடி, சுருட்டு போன்றவை. (4) சென்னை ஆப்காரிச் சட்டம், கஞ்சா சட்டம் இவைகளின்படி வரி விதிக்கப்பட்ட சாமான்கள். மேற்கண்ட சாமான்கள் வேறு சட்டங்களின் கீழ் வரி விதிக்கப்படுவதால் இவைகளுக்கு விற்பனை வரி கிடையாது. [4]

அத்தியாவசியமில்லாத சில சாமான்களுக்கு இன்னும் ஒரு தடவை வரி: சில சாமான்களுக்கு சாதாரணமாக ரூபாய்க்கு காலணா விற்பனை வரியை எல்லா வியாபாரிகளும் கொடுப்பதுடன் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் மட்டும் வியாபாரம் செய்யும் வியாபாரி மறுபடியும் ஒரு வரி கொடுக்கவேண்டும். அதாவது மோட்டார் வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், லாரிகள், டயர், மோட்டார் உபகரணங்கள் இவைகளை சென்னை மாகாணத்தில் முதல் முதல் விற்பனை செய்யும் வரி செலுத்தும் வியாபாரி (அதாவது ரூ. 10,000-க்குக் குறையாமல் ஒரு வருஷத்தில் மொத்த வியாபாரமுள்ளவர்) மட்டில், இவைகளை விற்பனை செய்யும் தொகையில் ஒரு ரூபாய்க்கு அரையணா விகிதம் (காலணா வரியைத்தவிர) ஒரு தனி வரி கொடுக்க வேண்டும். அது போலவே இம்மாகாணத்தில் முதல் முதல் விற்பனை செய்யும் வரியுள்ள வியாபாரி (1) ரிப்ரிஜிரேட்டர் (2) ரேடியோக்கருவிகள், ஒலிபரப்பிக் கருவிகள், ரேடியோ, கிராமபோன் (3) சினிமாப்படம் பிடிக்கும் கருவிகள், படம் பிடிக்க உபயோகப்படும் பிலிம், பேப்பர், துணி போன்ற சாமான்கள் (4) எலெக்ட்ரிக் விளக்கு (பல்ப்), விசிறி முதலிய எல்லா எலெக்ட்ரிக் சாமான்கள் (5) ரூ. 20-க்குமேல் விலையுள்ள பவுண்டன் பேனா, பென்சில் செட்டு (6) கெடியாரம், கைக்கெடியாரம், இவைகளை விற்றால் 1-ரூபாய்க்கு காலணா விகிதம் (சாதாரண காலணா வரி தவிர) தனி வரி கொடுக்கவேண்டும். [3 (2)]

சில சாமான்களை லைசென்சு பெற்ற வியாபாரி விற்றால் விற்பனை வரி கிடையாது.

(1) பருத்தி, கதர் நூல், கதர் ஜவுளி இவைகளில்மட்டும் வியாபாரம் செய்யும், இதற்காகவே லைசென்சு பெற்ற வியாபாரி இந்த சாமான்களை விற்பனை செய்தால் விற்பனை வரி கிடையாது. லைசென்சு பெறாதவர்களுக்கும், மற்ற சாமான்களுடன் சேர்த்து மேற்கண்டவைகளை விற்பவருக்கும் இந்தச் சலுகை கிடையாது. [5 (i)]

(2) மில் நூல் கலந்த கைத்தறி ஜவுளிகள் இந்த மாகாணத்தில் உள்ள ஒரு மொத்த வியாபாரிக்கோ சில்லரை வியாபாரிக்கோ விற்கப்பட்டாலும், மாகாணத்திற்கு வெளியே இருக்கும் வியாபாரிக்கு விற்கப்பட்டு சரக்கும் அனுப்பப்பட்டிருந்தாலும் விற்பனை செய்யும் வியாபாரி இதற்காக லைசென்சு பெற்றிருந்தால் அவர் இந்த சாமான்களின் விற்பனைக்கு விற்பனை வரியே கொடுக்கவேண்டியதில்லை.

(தொடரும்)

K. S. நாராயணசாமி & கோ.,
நியூஸ் ஏஜண்டு
மடத்துத்தெரு :: கும்பகோணம்

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்

இதர சர்க்கார் அறிக்கைகள்

உணவு தானியம்

சென்னை உணவு தானிய விலைக்கட்டுப்பாடு உத்திரவு (1949): ஒவ்வொரு ஜில்லாவிலும் நெல், அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு (ராகி), வரகு, சமை முதலிய எல்லா உணவு தானியங்களுக்கும் தனித்தனியாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு சென்னை சர்க்காரால் ஒரு தனி கண்ட்ரோல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்திரவு உடனேயே அமுலுக்கு வந்துவிட்டது. ஒவ்வொரு ஜில்லாவிலும் நெல் அரிசி உள்பட ஒவ்வொரு உணவு தான்யத்திற்கும் (1) கிராம விலை (2) ரயில் வாகனில் மூட்டைகளாக ஏற்றப்பட்டதற்கு (F. O. R.) விலை (3) மில்வாசல் விலை (4) மொத்த வியாபார விலை என்று தனித்தனியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ரயில்வே ஸ்டேஷன்களிலிருந்து உபரி ஜில்லாக்களில் 1 மைலுக்கு மேலும், மற்ற ஜில்லாக்களில் மில் அல்லது கிடங்குகளிலிருந்து 3 மைலுக்கு மேலும் இருக்கும் கிராமங்களுக்கு 1 மணுவுக்கு மைல் 1-க்கு $4\frac{1}{2}$ பைசா வீதம் வண்டிச்சத்தத்திற்காக விலை குறைக்கப்படும். மேலும் உற்பத்தி செய்பவர்களும், ஸ்டாக் வைத்திருப்பவர்களும் ஒரு முக்கிய விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அந்தந்த ஜில்லா கலெக்டர் குறிப்பிடும் தேதிக்குள் நெல்லை விற்பவர்களுக்குத்தான் இந்த விலை. அதற்குப் பிறகு விற்பவர்களுக்கு மணு 1-க்கு 6 அணு வரையில் விலை குறைக்கப்படும். தவிர உணவு தானியங்கள் எந்த எந்த ரகங்களாகவும், லட்சணங்களுடனும் இருக்க வேண்டுமென்றும் இந்தக் கட்டுப்பாடு உத்திரவில் விவாமாகக் காணப்பட்டிருக்கிறது.

(24-5-1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II சூல் சப்ளிமெண்ட் பக்கம் 93)

உணவு தானியத் தீவிரக் கொள்முதல் சட்டத் திருத்தம்: ஜமீன் கிராமங்களில் ரயத்துக்கள் வசமுள்ள உபரி தானியங்களை சர்க்காருக்கு விற்க வேண்டும்.

1948-ஆம் வருடத்திய உணவு தானியத் தீவிரக் கொள்முதல் உத்திரவில் நிலங்களை சாகுபடி செய்யும் குத்தகைதார்களும் ரயத்துக்களுங்கூட தங்கள் வசமுள்ள உபரி தானியங்களை அந்த ஜில்லா கலெக்டருக்கோ கலெக்டரால் நியமிக்கப்படும் ஏஜெண்டுக்கோ விற்றுவிட வேண்டுமென்றுக் கண்டிருக்கிறது. உபரி தானியத்தை கணக்குச் செய்வதில் தன் சாப்பாட்டுக்குத் தேவையான தானியத்தையும், நிலத்தின் சொந்தக்காரர் அல்லது மேல்வாரதாரருக்கு கொடுக்க வேண்டிய குத்தகை அல்லது மேல் வார தானியங்களையும், விரை சாகுபடிச் செலவு முதலியவற்றிற்கு தேவையான தானியங்களையும், இன்னும் சில காரியங்களுக்காகவும் கழித்துக் கொண்டு பாக்கி இருப்பதுதான் உபரி தானியம் என்று கணக்கிடலாம். (இப்பொழுது ஜமீன் கிராமங்களில் ஏற்பட்டிருக்கும் நிலைமையை உத்தேசித்து) இது மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது தென் கன்னடத்தைத் தவிர மற்ற ஜில்லாக்களில் உள்ள ஜமீன் கிராமங்களின் ரயத்துக்கள் (குடிக்காணிக்காரர்கள்) ஜமீன்தாருக்கு மேல் வாரம் கொடுக்காமலும் அல்லது கொடுக்க இஷ்டப்படாமலும் அந்த தானியத்தை தன் வசமே வைத்துக் கொண்டிருந்தால், ஜமீன்தாருக்குச் சேர வேண்டிய ஜாடா மேல் வாரமும் உபரி தானியமாகக் கருதப்படும். அதாவது அத்தானியத்தை ஜில்லா கலெக்டருக்கோ அவரால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுக்கோ விற்றுவிடவேண்டும்.

(3 5 49 சென்னை சர்க்கார் கெஜெட் பாகம் I சூல் சப்ளிமெண்ட் பக்கம் 87)

பங்கீடு (ரேஷன்)

கோதுமை, ரவை விநியோகம்

அரிசிக்குப் பதிலாக பெற்றுக் கொள்ளலாம்: இம்மாகாணத்தில் தற்போது கோதுமை, ரவை சரக்குகள் அதிகம் கைவசம் இருப்பதாலும், இவை வெகு தாமதமாக செலவாவதாலும், அரிசிக்குப் பதிலாகவும் இவற்றை விநியோகிக்க ரெவின்யு போர்டு ஏற்பாடு செய்திருக்கிறது. 1-5-49 லிருந்து அடியிற் கண்ட விகிதத்தில் ரேஷன் இருக்கும்.

அரிசி உட்கொள்வோர்: 8 அவுன்ஸ் அரிசி, கோதுமை அல்லது ரவை. 2 அவுன்ஸ் ரவை; 2 அவுன்ஸ் கோதுமை, ரவை, சோளம், சோளமாவு, மிலோ அல்லது ஸ்தலத்தில் கிடைக்கும் புஞ்செய் தான்யங்கள்.

கலப்பட உணவு உட்கொள்வோர்: 4 அவுன்ஸ் அரிசி, கோதுமை, அல்லது ரவை, 2 அவுன்ஸ் ரவை: 6 அவுன்ஸ் கோதுமை, ரவை, சோளம், சோளமாவு, மிலோ அல்லது ஸ்தலத்தில் கிடைக்கும் புஞ்செய் தான்யங்கள்.

புஞ்செய் தான்யம் உட்கொள்வோர்: 2 அவுன்ஸ் அரிசி, கோதுமை, அல்லது ரவை: 2 அவுன்ஸ் ரவை; 8 அவுன்ஸ் கோதுமை, ரவை, சோளம், சோளமாவு மிலோ, அல்லது ஸ்தலத்தில் கிடைக்கும் புஞ்செய் தான்யங்கள்.

மொத்த ரேஷன் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு 12 அவுன்ஸுக்கு அதிகமாக இருக்கக்கூடாது. அல்லது 12 அவுன்ஸ் ரொட்டி, 2 அவுன்ஸ் ரவை பெற்றுக் கொள்ளலாம். இதற்கு அதிகமாக ரேஷன் விகிதம் போகக்கூடாது.

அரிசிக்குப் பதிலாகவோ, இதர தான்யங்களுக்குப் பதிலாகவோ ரொட்டி பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இந்த 2 அவுன்ஸ் ரவை அளவுக்கு ரொட்டி பெற முடியாது.

கோதுமையே உபயோகிப்போருக்கும், வைத்திய சிகிச்சை பேரில் கோதுமை தேவையாயிருப்போருக்கும் 10 அவுன்ஸ் கோதுமை, அல்லது ரவை, தவிர 2 அவுன்ஸ் ரவை அல்லது 12 அவுன்ஸ் ரொட்டி, 2 அவுன்ஸ் ரவை பெறலாம்.

சோளம், மிலோ, ஸ்தலத்தில் கிடைக்கும் புஞ்சை தான்யங்கள், கோதுமை, ரவை முதலியன வாங்குவது ஒருவருடைய இஷ்டத்தை பொறுத்தது.

மேற்படி ரேஷன் விகிதம் சாப்பாடு ஹோட்டல்களுக்கும், போஜன விடுதிகளுக்கும் பொருந்தும்.

சிமண்டு

பாகிஸ்தான்-சிமண்டு விற்பனை

பழைய உத்திரவில் மாறுதல்: சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி போன்ற நகரங்களிலிருப்பவர் தாங்கள் விலைக்கு வாங்கும் சிமண்டில் பாதிப் பகுதியை பாகிஸ்தான் - சிமண்டாக வாங்கிக் கொள்ளவேண்டுமென்று சென்னை சர்க்கார் பிறப்பித்திருந்த உத்தரவை 19-5-1949-ல் மாற்றி சென்னை சர்க்கார் பின்கண்ட புது உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

20 டன்களுக்கு அதிகமான அளவுக்கு மனுப் போடுவோர்மட்டிலும் பாதியை பாகிஸ்தான் சிமண்டாகப் பெறவேண்டும். 20 டன்வரை தேவையாயுள்ளவர்கள் இந்திய சிமண்டையே வாங்கலாம்.

சிமண்ட் கட்டுப்பாடு விதியிலிருந்து தர்ம ஸ்தாபனங்கள், பள்ளிக்கூடங்கள், காலேஜுகள், உணவு உற்பத்திப் பெருக்கு திட்டங்கள் ஆகியவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

தற்சமயம் இருப்பிலுள்ள பாகிஸ்தான் சிமண்டு 2000 டன்கள்தான். இந்திய சிமண்டின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 85. பாகிஸ்தான் சிமண்டின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 144.

விலை நிர்ணயம்

உருக்கு விலை உயர்வு 2 வருஷம் வரை நீடிக்கும்

இந்திய சர்க்கார் அறிக்கை: உருக்கு விலைகளில் டன்னுக்கு சராசரி ரூ. 18 விதம் உயர்த்தப்பட்டுள்ள விலை உயர்வு மே 1உ முதல் 2 வருஷம் வரை (1951 ஏப்ரல் 30உ வரை) அமலில் இருக்குமென்று இந்திய சர்க்காரின் விசேஷ கெஜட் அறிக்கை ஒன்று கூறுகிறது.

கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட எல்லா உருக்கு வகைகளுக்கும் சர்க்கார் விலைகள் நிர்ணயிக்க விரும்புவதாகவும், ஸ்லீப்பர்கள், சக்கரங்கள், சக்கரங்களுக்குப் போடும் பட்டம் முதலிய விலை கட்டுப்படுத்தப்படாத உருக்கு வகைகளின் விலைகளும் மே 1உ யிலிருந்து கட்டுப்படுத்தப்படுமென்றும் சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

விலைகள் ஸ்திரமாக இருக்க வேண்டுமென்பதற்காகவும், இந்தியாவில் உருக்கு உற்பத்தி செய்யும் டாடா இரும்பு உருக்குக் கம்பெனி, வங்காள உருக்கு கார்ப்பரேஷன் ஆகிய இரண்டும், காப்புவரி போர்டு கூறியுள்ள புனரமைப்பு யோசனைகளை நிறைவேற்றவும் உயர்த்தப்பட்ட விலைகள் 2 வருஷம் வரை அமலில் இருப்பது அவசியமென்றும் சர்க்கார் கருதுகின்றனர்.

இரும்பு

இரும்புக் கம்பி வினியோக கட்டுப்பாடு ரத்து

விலை நிர்ணயமும், ஏற்றுமதி தடையும் நீடிக்கும்: கல்கத்தா, மே 19—இறக்குமதி செய்யப்பட்டுள்ள இரும்புக் கம்பி (வயர் ரெயில்) தேசத்தில் ஏராளமாக இருப்பதால் அதன்மீதுள்ள வினியோகக் கட்டுப்பாட்டைத்தளர்த்த இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர் என இன்று அறிவிக்கப்பட்டது.

கம்பிகள் தயாரிப்போரும், வியாபாரிகளும் தங்களிடமுள்ள கையிருப்பை தாராளமாக தங்களிஷ்டப்படி விற்பனை செய்யலாம் என்று இந்திய சர்க்கார் இரும்பு-எஃகு கண்ட்ரோலர் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

இதேபோல கம்பிகள் வாங்க விரும்புவோரும் கோட்டா சர்ட்டிபிக்கேட்டோ, பெர்மிட்டோ இல்லாமல் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம்.

ஆனால் இந்திய யூனியனிலிருந்து வெளியே கம்பிகள் அனுப்புவதற்குள்ள கட்டுப்பாடுகளும், அவற்றின் சட்டபூர்வமான அதிகபட்ச விலைகளும் தொடர்ந்து நீடிக்கவே செய்யும்.

ஜவுளி

கைத்தறி ஜவுளிகள்

தபால் மூலம் அனுப்ப தடை ரத்து: கைத்தறி ஜவுளிகளை தபால் மூலம் அனுப்புவதற்குள்ள தடையை இந்திய சர்க்கார் நீக்கி விட்டது.

உற்பத்தியாளரிடம் தேங்கிக் கிடக்கும் ஸ்டாக்கை குறைப்பதற்காக சர்க்கார் இந்த முடிவு செய்திருக்கின்றனர்.

கைத்தறி ஜவுளிகளை அனுப்பும் விஷயத்தில் இப்பொழுது எவ்விதத் தடையும் கிடையாது. கிடைக்கக்கூடிய எவ்விதமான போக்குவரத்து மூலங்களையும் உபயோகிக்கலாம்.

(கைத்தறி ஜவுளி போக்குவரத்து மீது உள்ள தடை ஏற்கனவே நீக்கப் பட்டிருக்கிறது).

ஷாப்சட்டம் அறிக்கைகள்

கடைகள், ஹோட்டல்கள், சினிமா முதலிய எல்லா ஸ்தாபனங்களும் தினசரி திறந்து மூடும் நேரம்—1—7—49 முதல் அமுலுக்கு வரும்: ஷாப் சட்டத்தின் 7, 13, செக்ஷன்களின் கீழ் சென்னை மாகாணத்

திலுள்ள ஒவ்வொரு ஸ்தாபனமும் தினசரி எந்த நேரத்திற்கு முன் திறக்கக்கூடாது; எந்த நேரத்திற்குப் பிறகு திறந்து வைத்திருக்கக்கூடாதென்று மாகாண சர்க்கார் உத்திரவு ஏற்படுத்தி விட்டனர். அந்த உத்திரவு 1—7—1949 முதல் அமுலுக்கு வரும். அந்தஸ்தாபனங்கள் இந்த உத்திரவில் கண்ட நேரத்திற்குள் அமையும்படி தங்கள் தங்கள் வேலை நேரங்களை ஷாப் சட்டத்தின் மற்ற பாகங்களுக்கு விரோதமன்னியில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

	எந்த மணிக்கு முன் திறக்கக் கூடாது.	எந்த மணிக்குப்பிறகு திறந்து வைத்திருக்கக் கூடாது.
	காலை	இரவு
(1) கடைகள்	6-மணி	10-மணி
(2) வர்த்தக ஸ்தாபனங்கள் (கம்பெனி - பாங்கு போன்றவை)	8 ,,	8 ,,
(3) காபி ஹோட்டல்கள், சாப்பாட்டு ஹோட்டல்கள்.	5 ,,	10 ,,
(4) சினிமாக் கொட்டகைகள் இதர கேளிக்கை விடுதிகள்.		
(a) ஞாயிற்றுக் கிழமைகளிலும் பொது விடுமுறை நாட்களிலும்	9 ,,	1-30 ,,
(b) மற்ற நாட்களில்	மாலை 1 ,,	1-30 ,,

பஸ் ஸ்டாண்டுகளில் உள்ள கடைகள் வாரத்தில் ஒரு தினம் மூட வேண்டியது இல்லை: ஷாப் சட்டம் செக்ஷன் II (1)படி எல்லாக் கடைகளும் வாரத்தில் ஒரு தினம் கட்டாயமாய் மூடப்பட வேண்டும். ஆனால் சர்க்கார் இந்த விதியிலிருந்து எந்தக் கடைகளையும் விலக்கலாம். அந்த அதிகாரத்தை அனுசரித்து இப்பொழுது சர்க்கார் சென்னை மாகாணம் முழுவதிலும் உள்ள பஸ் ஸ்டாண்டுகளில் உள்ள எல்லாக் கடைகளும் சிற்றுண்டிச்சாலைகளும் வாரத்தில் ஒரு நாள் கட்டாயமாக மூடப்பட வேண்டியதில்லை என்று விதி விலக்கு அளித்திருக்கிறார்கள்.

(குறிப்பு:-ஆனால் அவைகளில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை உண்டு).

(10—5—49 சென்னை சர்க்கார் கெஜெட் பாகம் I பக்கம் 617)

இன்ஸ்பெக்டர்கள் நியமனம்: அடியிற் கண்ட உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் அதிகார எல்லைக்குள் ஷாப் சட்ட இன்ஸ்பெக்டர்களாய் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அதாவது:-

(1) தொழிற்சாலைகளின் டெப்யூடி சீப் இன்ஸ்பெக்டர்.

(2) அஸிஸ்டென்ட் லேபர் கமிஷனர்.

(3) தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள்-ஸ்திரீ இன்ஸ்பெக்டர்கள்.

(4) லேபர் ஆபீசர்கள்.

(5) ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தர்கள்.

(6) உதவி ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தர்கள்.

(7) முனிசிபல் சுகாதார உத்தியோகஸ்தர்கள்.

(8) சென்னை கார்ப்பரேஷன் சுகாதார உத்தியோகஸ்தர்களும், உதவி சுகாதார உத்தியோகஸ்தர்களும்.

ஏற்கனவே 4—5—1948 சென்னை சர்க்கார் கெஜட்டில் செய்யப்பட்ட விளம்

பரம் ரத்து செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இதில் கண்ட உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(17-5-1949 சென்னை சர்க்கார் கெஜட் I-பாகம் சப்ளிமெண்ட் பக்கம் 2)

ஜாகை-வாடகை கண்ட்ரோல்

கோயில் மடங்கள் முதலிய தர்மங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கும் மறுபடியும் ஜாகை-வாடகை கண்ட்ரோல் சட்டம் உண்டு: சென்ற மார்ச் மாதத்தில் ஜாகை வாடகை கண்ட்ரோல் சட்டம் கோயில்கள், மடங்கள் முதலிய தர்மஸ்தாபனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு அனுஷ்டிக்கப்படமாட்டாதென்று சர்க்கார் இவைகளுக்கு (16—3—49-ல்) விதிவிலக்குச் செய்த உத்திரவை இப்பொழுது ரத்துச் செய்து விட்டார்கள். அதாவது முன்போல் இக்கட்டிடங்களுக்கும் ஜாகை வாடகை கண்ட்ரோல் சட்டம் உண்டு.

ஜாகை வாடகை கண்ட்ரோல் சட்டம் புதுக்கோட்டைக்கு விஸ்தரிப்பு: சென்னை 1946 ஆம் வருடத்திய 15-வது ஆக்ட் ஆகிய ஜாகை வாடகை கண்ட்ரோல் சட்டம் புதுக்கோட்டை முனிசிபல் டவுனுக்கும் (இனி சர்க்காரால் விளம்பரம் செய்யும் இடங்களுக்கும்) விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. புதுக்கோட்டை திவான் பேஷ்கார் ஜாகை வாடகை கண்ட்ரோலராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(10—5—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் 1 பக்கம் 595)

சினிமா, டிராமாக் கொட்டகையில் புகை குடிக்கக்கூடாது

இதற்காக 1888-ம் வருஷத்திய 2-வது சட்டத்தின் விதிகள் மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது சினிமா, டிராமா, நாட்டியம் முதலியவை நடந்து கொண்டிருக்கும் பொழுது பொது ஜனங்கள் உட்கார்ந்து பார்க்கும் இடங்களில் எவரும் சுருட்டு, சிகரெட், பீடி முதலியவற்றை குடிக்க கொட்டகைக்கு லைசென்சு பெற்றவர் அனுமதிக்கக்கூடாது.

(17—5—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் 1 A ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 59)

புதுக்கோட்டை

புதுக்கோட்டையில் சில தாவாக்கள் செய்ய வாயிதா

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் 1949 ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி அல்லது 2-ம் தேதிகளில் சட்டப்படி போடப்பட்டிருக்கவேண்டிய தாவா, அப்பீல், மனு முதலிய எவ்வித கோர்ட்டு நடவடிக்கைகளையும் கோடை விடுமுறைக்குப் பிறகு கோர்ட்டுகள் திறக்கும் தினத்தில் அந்தந்த அதிகாரமுள்ள கோர்ட்டுகளில் தாக்கல் செய்தால் காலாவதி இல்லை.

(17—5—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 628.)

புதுக்கோட்டை-இரண்டாவது அப்பீல்கள்

புதுக்கோட்டை சீப் கோர்ட்டின் அப்பீல் தீர்ப்புகளின் பேரில் இரண்டாவது அப்பீல் செய்ய வேண்டுமானால் சென்னை ஹைகோர்ட் ரிஜிஸ்டர் ஆபீஸில் தாக்கல் செய்யப்படவேண்டும். இது விஷயமாய் சென்னை ஹைகோர்ட் அப்பீல்களைப் பற்றிய விதிகளே அனுஷ்டிக்கப்படும். இப்பொழுது (அதாவது விளம்பரத் தேதியாகிய 10—5—49-ல்) விசாரணைக்குத் தயாராக இருக்கும் இரண்டாவது அப்பீல்கள் புதுக்கோட்டையிலேயே சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஒருவரால் விசாரிக்கப்படும். 1—4—49-க்கு முன்பு சீப் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு, ஆனால் விசாரணைக்குத்தயாராக இல்லாத அப்பீல்கள் சென்னை ஹைகோர்ட்டுக்கு மாற்றப்படும். புதுக்கோட்டையில் நடத்தப்படும் விசாரணை ஆரம்ப தினம் அதற்கு ஒரு மாதம் முன்கூட்டியே கெஜட்டில் பிரசுரிக்கப்படும். விசாரணைக்கு இரண்டு வாரம் முந்தியே விசாரணைக்குத் தயாராக இருக்கும் கேசுகளை குறிப்பிட்டு புதுக்கோட்டை சப்கோர்ட் நோட்டீஸ் போர்டில் நோட்டீஸ் விளம்பரப்

படுத்தப்படும். இந்த அப்பீல்கள் டிக்ரி அல்லது ஜட்ஜ்மெண்டுகளுக்கு நகல் தேவையானல் புதுக்கோட்டை சப் ஜட்ஜியிடம் பணம் கட்டி பெற்றுக் கொள்ளலாம்.

(10-5-49 சர்க்கார் கெஜெட் பாகம் 2. ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 90).

தொழிற்சாலைச் சட்டம்

10 தொழிலாளர் வேலை செய்யும் எல்லா இடங்களுக்கும் தொழிற்சாலைச் சட்டம் அமுலுக்கு வந்து விட்டது: 1948 ஆம் வருடத்திய தொழிற்சாலைச் சட்டம் என்ற மத்திய சர்க்கார் சட்டம் இதுவரை, எலெக்டிரிக் முதலிய விசை அல்லது சக்தியின் உதவியால் நடத்தப்படும் தொழிற்சாலைகளில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தாலும்; விசை அல்லது சக்தியின் உதவியில்லாமலே நடத்தப்படும் தொழிற்சாலைகளில் 20 அல்லது அதற்குமேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தாலும் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. இது இப்பொழுது மாற்றப்பட்டு, இனி விசை உதவியில்லாமல் வேலை செய்யும் இடங்களிலும் 10 அல்லது அதற்குமேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தாலும் தொழிற்சாலைச் சட்டம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். (அதாவது இனி 10 அல்லது அதற்குமேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் எல்லா தொழிற் சாலைகளிலும் தொழிற்சாலைச் சட்டப்படி நடத்தப்பட வேண்டும்).

(3-5-49 சென்னை சர்க்கார் கெஜெட் பாகம் I பக்கம் 560)

இறக்குமதி

லைசென்ஸ் இல்லாமல் இறக்குமதி செய்யக்கூடிய சாமான்கள் புது ஜாபிதா, ஓ. ஜி. எல். 15: புதுடில்லி, மே. 19. சுலப நாணயச் செலாவணி (ஸ்டர்லிங்) பிரதேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படக் கூடிய சாமான்களின் புதிய ஜாபிதா ஒன்றை இந்திய சர்க்கார் வர்த்தக இலாகா வெளிட்டுள்ளது. இவ்விறக்குமதிகளுக்கு இந்திய சர்க்காரிடம் லைசென்ஸ் பெற வேண்டியதில்லை. ஆனல் இறக்குமதி செய்யப்படும் சாமான்கள் சுலபச் செலாவணி பிரதேசங்களிலேயே தயாராவனவாக இருக்கவேண்டும்.

இப்புதிய ஜாபிதா ஓ. ஜி. எல். 15 என வழங்கப்படும். மே. 4-ந்தேதி ரத்து செய்யப்பட்ட ஓ. ஜி. எல். 11-க்குப் பதிலாக இந்த ஜாபிதா வெளியிடப்பட்டுள்ளது.

புதிய உத்திரவுப்படி இறக்குமதி செய்யப் படக்கூடிய முக்கிய சாமான்களாவன:—

அஸ்பெஸ்டாஸ் தயாரிப்புகள் பால்-பேரிங்ஸ் (Ball bearings); சணல் மில் சாமான்கள், ஜவுளிமில் யந்திரங்கள் உறுப்புகள், (தறிகள், நூற்கும் கருவிகள் நீங்கலாக) புட்டிப்பால், பால் பவுடர், கிராம்பு போன்ற வாசனைச் சரக்குகள், சிமிண்ட், வெள்ளை எண்ணெய் நீங்கலாக பூமியிலிருந்து எடுக்கப்படும் இதர எல்லாவித எண்ணெய்கள், மருந்துகள், பெயின்ட் தயாரிப்பதற்கான கச்சாப் பொருட்கள், பருத்தி கம்பள நூல்கள், ஜவுளிகள், செயற்கைப்பட்டு நூல், கடலை, தவிர பருப்பு வகைகள், ரேடியோச்சாமான்கள், மோட்டார் உறுப்புகள், அச்சு யந்திரங்கள், விவசாயக்கருவிகள், சில விஞ்ஞானக் கருவிகள் முதலியன.

பழைய ஓ. ஜி. எல். 11-வது ஜாபிதாவிலிருந்து புது ஓ. ஜி. எல். 15-வது ஜாபிதாவில் சேர்க்கப்படாத சில சாமான்கள் சம்பந்தமாக வர்த்தகர்கள் விண்ணப்பங்கள் செய்து கொண்டதன் விளைவாக மே 20ந் தேதிக்குள் அவை கப்பலேற்றப்பட வேண்டுமென்றிருந்த தவணையை 1949 மே 31 ந் தேதி வரை நீடித்துள்ளனர்.

இந்தியா வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள 10 சுலப நாணயச் செலாவணி நாடுகளின் பெயர்களும், அந்த நாடுகளுடன் நாம் எந்தெந்த சாமான்களில் இறக்குமதி-ஏற்றுமதி வைத்துக் கொள்ளலாமென்ற விவரங்களும் கீழே தரப்பட்டுள்ளன:—

பைஸோனியா (ஜெர்மனியின் ஆங்கில-அமெரிக்க பிரதேசங்கள்):- ரஸாயன மருந்துகள், யந்திரங்கள், ஜவுளி மில் யந்திரங்கள், யந்திரக் கலப்பைகள், கருவி உட்பட உலோகச் சாமான்கள்.

செக்கோஸ்லாவேகியா: பெரும் பான்மையும் பெரும் யந்திரங்கள்.

ஸ்விட்ஸர்லாந்து: ரயில்வே கோச்சுகள், யந்திரக் கருவிகள் (மெஷின்டூல்) தயாரிப்பதற்கான பெரும் யந்திரங்கள், பெரிய மின்சார சாதனங்கள், இதர பெரும் யந்திரங்கள், ஜவுளிகள், கைக் கடிகாரங்கள், ரஸாயன மருந்துகள் முதலியன.

ஜப்பான்: கைத் தொழில் யந்திரங்கள், ஜவுளி யந்திரங்கள், தோல் சாமான்கள்.

எகிப்து, பின்லாந்து, போலந்து, யுகோஸ்லேவியா, ஆகிய நாடுகளுடனும் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ள சாமான்களை அந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளலாம். பாகிஸ்தானும் இந்தியாவும் பரஸ்பரம் தேவையான சாமான்களை வாங்கிக் கொள்ளும்.

கிணறுகள் வெட்ட பண உதவி

திட்டத்தை விளக்கி சர்க்கார் அறிக்கை:

சென்னை, மே 10 - சென்னை சர்க்கார் அறிவிக்கின்றனர். சர்க்காரின் புது கிணறு வெட்டும் திட்டம் 1—4—49-லிருந்து மேலும் ஒரு வருஷத்துக்கு நீடிக்கப்படுமென்று ஏற்கனவே அறிவித்துள்ளோம். சென்னையைத் தவிர மற்ற எல்லா ஜில்லாக்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். மலபாரிலும், தென்கன்னடத்திலும் கிணறுகளுக்குமட்டுமல்லாது பழைய, புதிய குளங்களுக்கும் 'சப்-சிடி' கொடுக்கப்படும்.

2. செலவில் பாதி உதவித் தொகையாக (சப்-சிடி) கொடுக்கப்படும். அதிகபட்ச உதவி ரூ. 500. ஆனால் கல்லும் பாறையுமாக இருக்கிற பிரதேசங்களிலும், கூலி அபரிமிதமாய் இருக்கும் பிரதேசங்களிலும் அதிகபட்ச உதவித் தொகை ரூ. 750.

3. தென் கன்னடத்திலும், மலபாரிலும் பழைய குளங்களுக்கும், புதிய குளங்களுக்கும் மொத்தச் செலவு ரூ. 1000-க்கு அதிகமாக இருப்பின் பாதிச்செலவை கலெக்டர் சாங்ஷன் செய்வார். அவர் சாங்ஷன் செய்யக்கூடிய அதிகபட்சம் ரூ. 1000. ரெவின்யூ போர்டு 2000 ரூபாய் வரை 'சாங்ஷன்' செய்யலாம். எந்த சந்தர்ப்பத்திலும் உதவித் தொகையாக ரூ. 2000 - க்கு மேல் கொடுக்கப்படமாட்டாது.

4. ஆரம்பத்தில் உதவித் தொகை 'தக்காவி' கடனாக கொடுக்கப்படும். 30—9—50-க்குள் வேலை திருப்திகரமாக முடிவுபெற்றால்தான் அது உதவித் தொகையாக பாவிக்கப்படும். 31—3—50-க்குப் பிறகு உதவித் தொகை கொடுக்கப்படமாட்டாது. ஒரு கிராமத்தில் ஒரு நபருக்கு 5 கிணறுகளுக்குமேல் உதவிப்பணம் கொடுக்கப்படமாட்டாது. ஆனால் கூட்டுறவு சங்கங்கள் அல்லது கம்பெனிகளுக்கு எண்ணிக்கை சம்பந்தமான கட்டுப்பாடுகள் கிடையாது.

5. கிணறு அல்லது குளம் வெட்டும் இடம் சம்பந்தமாக முன்கூட்டி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். குளத்தைச் சுற்றி குறைந்தபட்சம் ஒரு ஏக்கரா ஆயக்கட்டாவது இருக்கவேண்டும். குறைந்தபட்சம் மூன்று வருஷங்களுக்கு அதில் உணவு தான்யத்தை பயிர்செய்யவேண்டும். கிணற்றில் 8 கஜம் ஆழம் இருக்கவேண்டும். கடுமையான கோடையில்கூட குறைந்தபட்சம் ஆறு அடி ஜலம் இருக்கவேண்டும். ஆனால் கோவை ஜில்லாவில்மட்டிலும் 4 அடி ஜலம் இருந்தால் போதும். உணவுப் பொருள்களில் கறிகாயும் சேர்ந்ததே. ஆனால் அதை கலெக்டர் அங்கீகரிக்க வேண்டும். கிணறு வெட்ட ஆரம்பிக்காதபட்சத்திலும், குறிப்பிட்ட காலத்தில் திருப்திகரமான கிணற்றை கட்டாதபட்சத்திலும் ஆரம்பத்தில் கடனாகக் கொடுக்கப்படும் தொகை வட்டி சகிதம் உடனே திரும்ப வசூலிக்கப்பட்டுவிடும்.

6. இவ்வுதவியை ரயத்துக்கள் பயன்படுத்திக்கொண்டு கிணறுகளை வெட்டி உணவு உற்பத்தியைப் பெருக்குவார்களென்று சர்க்கார் நம்புகின்றனர்.

கிராமப் பஞ்சாயத்து மசோதா

R. கிருஷ்ணமூர்த்தி B. A., B. L.,

கிராமப் பஞ்சாயத்துகளில் சுய ஆட்சி துலங்கவேண்டும். அவை தன் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். கிராமத்தின் பொருளாதாரம், சுகவாழ்வு இவ்விஷயங்களில் பஞ்சாயத்திற்கு முழு அதிகாரமும் சுதந்திரமும் கொடுக்க வேண்டும். திறம்பட வேலை செய்வதற்குக் குந்தகமின்றி மேலிடத்தலையீடு குறைய வேண்டும். இந்நோக்கங்களுடன் சென்னை அரசாங்கம் பஞ்சாயத்து சட்டம் ஒன்று செய்யப் போவதாக அறிவித்து கீழே காணப்படும் அதன் முக்கிய அம்சங்களைக் குறித்துப் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கோருகிருர்கள்.

அமைப்பு

500 அல்லது அதற்கு மேற்பட்ட ஜனத் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து உண்டு. 500-க்கு குறைந்த ஜனத்தொகை கொண்ட கிராமங்கள் பக்கத்துகிராமங்களுடன் சேர்க்கப்பட்டு அச்சேர்க்கைக்கு ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தப்படும்.

5000 ஜனத் தொகைக்குக் குறையாத கிராமத்தின் பஞ்சாயத்து முதல் வகுப்புப் பஞ்சாயத்து எனப்படும். இவைகளுக்கு அரசாங்கம் ஒரு நிர்வாக உத்தியோகஸ்தரை நியமிக்கலாம். அவர் பஞ்சாயத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்டு வேலை செய்யவேண்டும்.

தேர்தல்

அவசியத்தையொட்டி ஒவ்வொரு கிராமமும் வார்டுகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு வார்டு வோட்டர்களும் தங்களது பிரதிநிதியை ரகஸ்ய வோட் மூலம் தேர்ந்தெடுப்பார்கள். பஞ்சாயத்துத் தலைவர் இப்பொழுது இருப்பது போல் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார். நேரடியாக கிராமத்து வோட்டர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கிராமத்தின் பட்டாமணியகாரருக்கு அவர் உத்யோகம் காரணமாகப் பஞ்சாயத்தில் ஒரு ஸ்தானம் உண்டு. ஆனல் அவருக்கு வோட் அளிக்கும் உரிமை கிடையாது. எந்த ஜாதியார்களுக்கும், வகுப்பினர்களுக்கும் இப்பொழுது இருப்பது போல் பிரத்யேக ஸ்தானம் ஒதுக்கி வைக்கப்பட மாட்டாது. நாமினேஷனும் கிடையாது. ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு உப தலைவர் உண்டு. ஆனல் அவர் வார்டு பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

நிர்வாகம்

பஞ்சாயத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குத் தலைவர் கடமைப்பட்டவர். எந்தத் தீர்மானமாவது அவருக்கு நிறைவேற்றக் கூடாது என்று தோன்றினல் அவ்விஷயத்தின் முடிவை அரசாங்கத்திற்கு விட்டுவிடவேண்டும். அரசாங்கத்தின் தீர்ப்பு முடிவானதும் பஞ்சாயத்தையும் தலைவரையும் கட்டுப் படுத்தக் கூடியதுமானது.

பஞ்சாயத்தைக் கலைப்பதற்கும் திரும்ப அமைப்பதற்கும், தலைவரைக் குற்றங்கள் காரணமாக நீக்கவும் அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. தலைவர் தமது அதிகாரங்களை உபதலைவருக்கு அளிக்கலாம். 15 நாளைக்கு மேல் தலைவர் கிராமத்தைவிட்டு வெளியே செல்வதானல் அவரில்லாத காலத்திற்கு தலைவர் அதிகாரங்கள் எல்லாம் உபதலைவருக்கு தானகவே வந்துவிடும்.

கடமைகள்

1. கிராமத்திலுள்ளது, மற்ற கிராமங்களை இணைப்பது இதுபோன்ற சாலைகளையும், அவைகளிலுள்ள பாலங்களையும், கல்வர்ட்டுகளையும் கட்டுவது, பழுதுபார்ப்பது, பராமரிப்பது.

2. பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும் விளக்குப் போடுதல்.

3. சாக்கடை கட்டுதலும், சாக்கடைத் தண்ணீர் வெளியேறச்செய்வதும்.

4. தெருக்களைச் சுத்தம் செய்வதற்கும், குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கும், பொது கக்கூஸ் கட்டுவதற்கும், எல்லா கக்கூஸ்களையும் சுத்தம் செய்வற்கும் ஏற்பாடு செய்தல்.

5. மயானங்கள் ஏற்படுத்துவதும் பராமரிப்பதும்.

6. குடிப்பதற்குச் சுத்தத் தண்ணீர் சப்ளை செய்வதும், குளிப்பதற்கும் துணி துவைப்பதற்கும் கிணறுகள், குட்டைகள் அல்லது குளங்கள் வெட்டுவதும், பழுது பார்ப்பதும்.

7. வியாதிகளைத் தடுப்பதற்கும், நிவர்த்திப்பதற்குமான பொது சுகாதார முறைகளைக் கையாளுதல்.

அதிகாரங்கள்

1. தற்காலம் கிராமக் கோர்ட்டு சட்டத்தின்படி கிராமக் கோர்ட்டுகளுக்கு சிவில், கிரிமினல் வழக்குகளில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைவிட அதிகமான அதிகாரங்கள் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்படும்.

2. ரெஜிஸ்டர் ஆபீஸ் அமைந்திருக்கும் இடங்களைத்தவிர மற்ற முதல் வகுப்புப் பஞ்சாயத்துக் கிராமங்களில் பஞ்சாயத்து நிர்வாக உத்தியோகஸ்தர் ஸ்டாம்பு, கட்டணம் இவை தேவையில்லாத பத்திரங்களையும், ரூ. 100-க்குக் குறைந்த மதிப்புள்ள சொத்து சம்பந்தமான தற்காலிக பத்திரங்களையும் ரெஜிஸ்டர் செய்யலாம்.

3. கிராமத்துப் பாசன மூலங்களைப் பழுதுபார்ப்பதான வேலை பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்படும். அதற்காக ஏகருக்கு 4 அணுவோ அல்லது 8 அணுவோ வரி விதித்து வசூலிக்கப்படும்.

4. கிராமத்துக் குளங்கள், பாசன மூலங்கள், வடிகால்கள் இவைகளின் பாசிஉரிமைகள் பஞ்சாயத்திடம் சாரும். இது விஷயத்தில் கிராம சமுதாயமோ அல்லது வகுப்பினரோ தற்காலம் கொண்டாடும் உரிமைகளெல்லாம் ரத்து செய்யப்படும்.

5. கிராமத்திற்குச் சம்பந்தமான எல்லா தர்மங்களையும், தர்ம சொத்துக்களையும் அரசாங்கம் தனது அபிப்பிராயத்திற்கிணங்க பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்திற்கு மாற்றலாம்.

6. ஆரம்பப்பள்ளிக்கூடமில்லாத கிராமங்களில் பஞ்சாயத்து ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி நடத்திவரும். அதற்கு அரசாங்கத்திலிருந்து மானியம் கொடுக்கப்படும்.

மேலும் சாலைகளில் மரங்கள் வைப்பது, மார்க்கெட்டுகள், வண்டி நிறுத்துமிடம், வாசகசாலை, விளையாடுமிடம், வைத்திய சாலை முதலியவற்றை ஏற்படுத்துவது இவை போன்ற பல பொதுஜன சௌகர்யத்திற்கான வசதிகள் செய்யலாம்.

செல்வம்

1. வீட்டுவரி, வண்டிவரி, தொழில்வரி இம்மூன்றையும் பஞ்சாயத்து அவசியம் விதித்தாக வேண்டும். (கூரை வீடுகள் போன்ற சில வகை வீடுகளுக்கும் ஏழ்மை காரணமாக சில ஜனங்களுக்கும் விலக்கு ஏற்படுத்தலாம்). விளம்பரவரி, காவல் வரி இது போன்ற மற்ற வரிகளில் கிராமத்திற்கு உகந்ததாக இருக்கும் எந்த வரியையும் சர்க்கார் அனுமதியின் பேரில் விதிக்கலாம்.

2. (அ) அவ்வப்பொழுது அரசாங்கத்தாரால் தீர்மானிக்கப்பட்டபடி கிராமத்தில் வசூலான செஸ் வரித்தொகை முழுவதுமோ அல்லது அதன் பாகமோ பஞ்சாயத்திற்குக் கொடுக்கப்படும். (ஆ) மாகாண நிலவரித் தொகையில் $12\frac{1}{2}$-சத விகிதத்திற்குக் குறையாத ஒரு தொகையை ஒதுக்கி வைத்து அதை ரூ 10,000-க்குக் குறைந்த வருமானமுள்ளதும், 5000-க்கு மேற்படாத ஜனத்தொகையுள்ளதுமான பஞ்சாயத்துகளுக்கு தலா விகிதமாக அரசாங்கத்தார் பிரித்துக்கொடுப்பார்கள். (இ) அரசாங்கத்தின் அபிப்பிராயத்தையொட்டிப் பொது ஜன வசதிக்கான திட்டங்களை நிறைவேற்ற இயலும்படி அவ்வப்பொழுது அரசாங்கத்தாரால் இப்

(தொடர்ச்சி 28-ம் பக்கம் பார்க்க)

கேள்வியும்-பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்குமட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி: ஷாப் சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கும் வேலை நேரம் "கண்ட்ராக்ட்காரர்"களுக்கும் உண்டா?

பதில்: ஒரு ஸ்தாபனத்தில் அந்த ஸ்தாபனத்தின் வேலைக்காகவே அமர்த்தப்பட்டிருக்கும் சிப்பந்திகளுக்காகத்தான் ஷாப் சட்டத்தில் தினசரி வேலை நேரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்தாபனத்தின் முதலாளியிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு (கண்ட்ராக்டர் முறைமையில்) ஒரு குறிப்பிட்ட வேலையை, தனி ஊதியம் பெற்று செய்து கொடுப்பவர் 'சிப்பந்தி' ஆகமாட்டார். அவருக்கு ஷாப் சட்ட வேலை நேரம் பொருந்தாது.

கேள்வி: ஜாகை-வாடகை கண்ட்ரோல் சட்டத்தின்படி, அட்வான்சு கொடுத்து ஒரு கட்டிடத்தில் வாடகைக்குக் குடியிருப்பவர், ஒருமாத வாடகையை கெடுவில் கொடுக்கத் தவறினால், சட்டப்படி அவரை அப்புறப்படுத்த மனுக் கொடுக்கலாமா?

பதில்: ஜாகை வாடகை கட்டுப்பாடு சட்டத்தின் 6-வது செக்ஷன் பிரகாரம் ஒரு கட்டிடத்திற்கு 'நியாய வாடகை' என்ன என்று கண்ட்ரோலர் நிர்ணயித்திருந்தால், அதற்குப் பிறகு கட்டிடத்தின் சொந்தக்காரர் குடியிருப்பவரிடம் ஒருமாத வாடகைமட்டில்தான் அட்வான்சு வாங்கலாம். நியாய வாடகைக்கு மேல், இச்சட்டத்திற்கு முன்போ, பின்போ கொடுக்கப்பட்டிருக்கும் அட்வான்சு தொகை உள்பட எல்லா அதிகத் தொகைகளையும் கட்டிட சொந்தக்காரர் குடியிருப்பவரிடம் திரும்பக் கொடுத்துவிடவேண்டும். குடி இருப்பவர் இஷ்டப்பட்டால் அவர் கொடுக்கவேண்டிய பிந்திய மாத வாடகைக்காகவும் அதை உபயோகப்படுத்திக்கொள்ளச் சொல்லலாம். 'நியாய வாடகை' தீர்மானிக்கப்படாமலிருக்கும் விவகாரங்களில் அட்வான்சு எதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஒப்பந்தம் இருந்தால் அதை அனுசரித்து நடந்துகொள்ளவேண்டியது.

(27-பக்கம் தொடர்ச்சி)

பொழுது கொடுக்கப்பட்டு வரும் இனாம் மான்யம் இனியும் கொடுக்கப்பட்டு வரும்.

மேற்பார்வையும் கட்டுப்பாடும்

இதுவரையிருந்தது போல் ஜில்லாபோர்டுகள் இனி பஞ்சாயத்துக்கள் மீது அதிகாரம் செலுத்தாது. கலெக்டர்களும், உயிர், சொத்து இவைகளைப் பாதுகாப்பதற்கும் அமைதிக்கும் பங்கங்களைத் தடுப்பதற்கும் வேண்டிய விசேஷ அதிகாரங்களைத் தவிர வேறு எந்த அதிகாரத்தையும் பஞ்சாயத்து மீது செலுத்த முடியாது. அரசாங்கம் ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டர், ஜில்லா பஞ்சாயத்து அதிகாரி, துணை பஞ்சாயத்து அதிகாரி இவர்கள் மூலம் பஞ்சாயத்தின் நடவடிக்கைகளை கண்காணித்துக் கட்டுப்படுத்துவார்கள்.

Printed by Dr. V. R. Murty at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam.
Edited and Published by M. R. Rajagopalan at No. 48 Kalyanaraman Street, Kumbakonam.

187686
சென்னை-600 0

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சிவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மெ. மெ. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்.

கிளை : 20, லெக்ஷ்மிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUN 1949
MADRAS

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சுகள்: மதராஸ் & மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்,
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.